விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 19 திங்கட்கிழமை (03.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 015

ராம்கோ

RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தீர்வுக்கான முன்ஆயத்தம் எதுவும் அரசிடம் இருப்பதாக தெரியவில்லை!

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)



இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமிக்ஞை எதுவும் இலங்கை அரசிடம் இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகிறது என தகவல்கள் வெளியாகியிருப்பதில் எந்த உண்மையும் கிடையாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கான அழைப்புகளோ அல்லது சமிக்ஞைகளோ அரசிடமிருந்து கிடைக்கவில்லை (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரியை அமெரிக்கா ரத்து செய்யும் அச்சம்?

(கொழும்பு)

அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற ஜி.எஸ்.பி. வரிச்சலுகையும் இந்த வருடத்துடன் இரத்தாவதற்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆடை உள்ளிட்ட பொருட்களின் ஏற்றுமதி மற்றும் மூலப்பொருட்களின் இறக்குமதிக்காக அமெரிக்க அரசாங்கத்தினால் இலங்கைக்கு இந்த வரிச்சலுகை வழங்கப்படுகிறது.

கடந்தவருடம் இலங்கையின் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுவதாக அமெரிக்க தொழிலாளர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்புக்கள் அமெரிக்க வர்த்தக சம்மேளனத்துக்கு முறைப்பாடு தெரிவித்திருந்தன.

இதனையடுத்து இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வர்த்தக பிரதிநிதிகள் இலங்கையின் தொழிலாளர் உரிமை தொடர்பில் ஆராய்ச்சிகளை நடத்திச் சென்றனர்.

இந்நிலையில், கடந்த டிசம்பர் மாதத்துடன் நீடிக்கப்பட வேண்டிய இந்த வரிச்சலுகை இதுவரையில் நீடிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான பயணத்தை ஐ.நா. நிபுணர் குழு கைவிட்டது!

(கொழும்பு)

ஐ.நா. நிபுணர்குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் முடிபை கைவிட்டுள்ளதாகவும் இது தொர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு அடுத்த வாரம் வெளியாகும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. நிபுணர்குழு இலங்கை வருவதற்கு நுழைவு அனுமதி வழங்கத் தயார் என்றும் ஆனால் அவர்கள் நல்லிணக்க ஆணைக் குழுவை மட்டுமே சந்திக்க முடியும். வேறுயாரையும் சந்திக்கவோ விசாரணை நடத்தவோ முடியாது என்றும் அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதையடுத்து ஐ.நா. நிபுணர் குழுவின் நோக்கம் பரந்தளவிலானது என்றும் அது இலங்கை செல்ல விரும்புவது தனியே நல்லிணக்க ஆணைக்குழுவை சந்திப்பதற்காக மட்டும் இருக்காது என்றும் ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் கூறியிருந்தார்.

இந்த நிலையில் அரசாங்கம் வேறு எவரையும் சந்திக்க அனுமதி மறுத்துள்ளதால் ஐ.நா. நிபுணர்குழுவின் பயணம் இடம்பெறாது என்றே (16ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்டோ சாரதியை காணவில்லை; உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் ஆட்டோ சாரதியொருவர் காணாமல்போயுள்ளதாக நேற்று கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. உரும்பிராய் மேற்கு சிவகுல வீதியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சோதிநாதன் கோபிநாத் (வயது 27) என்ற ஆட்டோ சாரதியே காணாமல்போயுள்ளார். இது தொடர்பில் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆட்டோ வாடகைக்கு வேண்டும் என தொலை (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கட்சிகளின் அரங்கம் கூட்டாக தேர்தலில் போட்டி!

### முயற்சி நடப்பதாக சிவாஜிலிங்கம் தகவல்


(கொழும்பு)

தமிழ்க்கட்சிகளின் அரங்கத்திலுள்ள அனைத்து கட்சிகளும் ஒரு முன்னணியாக பொது சின்னத்தின் கீழ் எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட முயற்சிப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா அணி), தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் தமிழ் தேசிய விடுதலை முன்னணியிடம் (த.தே.வி.மு) இணக்கம் தெரிவித்தள்ளதாக த.தே.வி. முன்னணியின் பொது செயலாளர் சிவாஜிலிங்கம் கூறினார்.

அரசியல் தீர்வு (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் பேசும் வாய்ப்பு இந்த மாதம் ஏற்படலாம்



### சுரேஷ் பிரேமச்சந்திரன் தகவல்

(கொழும்பு)

அரசியல் தீர்வு தொடர்பாக அரசாங்கத்துடன் இந்த மாதம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பு தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து சாதகமான சமிக்ஞை தென்படுவதாக த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், (16ஆம் பக்கம் பார்க்க)

NIBM
BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்



A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

NIBM இன் கணனிக் கற்கைநெறிகள்

கணனி தொழில்நுட்பத்தில் சான்றிதள் கற்கைநெறி (Certification in Computer Science)

அலுவலகர்களுக்கான கணனி கற்கைநெறி (certification on computers for officers)


அனுமதி பரீட்சை ஆரம்பமாகியுள்ளது

ஆகக் குறைந்த கல்வி தகைமை க.பொ.த சாதாரண தரம் (G.C.E (O/L))

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் (முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

# இந்திய - பாகிஸ்தான் படைத்தளபதிகள் ஒரே காலத்தில் இலங்கை வருகை



(கொழும்பு)


பாகிஸ்தான் மற்றும் இந்தியப் படைத் தளபதிகள் இந்த மாதம் இலங்கைக்கு பயணங்களை மேற்கொள்ளவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய விமானப்படை தளபதி ஏயர் சீஃப் மார்ஷல் பிரதீப் வசன்ந் நாயக் எதிர்வரும் 16ம் திகதி ஐந்து நாள் பயணமாக இலங்கைக்கு வரவுள்ளார். அவர் இலங்கை வான்படையின் வைரவிழாவில் கலந்து கொள்ளவுள்ளார்.

கடந்த மாதம் இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் நிமால்குமார் வர்மா இலங்கைக்கு பயணம் மேற்கொண்டதுடன் கடற்படையின் வைரவிழாவிலும் பங்குபற்றியிருந்தார்.

இந்திய விமானப்படை தளபதி இலங்கையில் தங்கியிருக்கும் சமயம் பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அஸ்பக் கஜானி கொழும்புக்கு பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். மூன்று நாள் பயணமாக எதிர்வரும் 19ஆம் திகதி பாகிஸ்தான் இராணுவத்தளபதி இங்கு வருவார்.



கடந்த நவம்பர் மாதம் பாகிஸ்தான் அரச தலைவரும் டிசம்பர் மாதம் இந்திய பாதுகாப்புத்துறை செயலாளரும் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வாகனங்கள் நேருக்கு நேர் மோதின

யாழ்.நகரில் தனியார் பேருந்தும் ஹயஸ் வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதனால் இரண்டு வாகனங்களும் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30மணிக்கு இடம் பெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிகளை ஏற்றிக் கொண்டு கஸ்தூரியார் வீதியூடாக வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து மின்சார நிலைய வீதியை நோக்கி திரும்ப எத்தனிக்கும் போது மின்சார நிலைய வீதியால் தென்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணியருடன் வந்த ஹயஸ் வான் குறித்த தனியார் பேருந்துடன் மோதியது. சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்.நகரப் பொலிஸாரும் இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டனர். (ந-4)

# பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் யார்?

## முடிவெடுப்பதில் சிக்கல்

(கொழும்பு)

பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் நிஹால் ஜெயசிங்க தனது பதவிக் காலத்தை இந்த வாரத்துடன் பூர்த்திசெய்யும் நிலையில், அடுத்த தூதுவராக யாரை நியமிப்பது என்பதில் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் இராணுவத் தளபதி அட்மிரல் வசந்த கர்னாகொட பிரித்தானியாவுக்கான தூதுவராக நியமிக்கப்படுவார் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவரை ஜப்பானுக்கான தூதுவராக அனுப்பிவைப்பதற்கே அரசாங்கம் தற்போது தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் கடற்படைத் தளபதியை பிரித்தானியாவுக்கான தூதுவராக நியமிக்கும் பட்சத்தில் அவருக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்ததையடுத்தே அவரை ஜப்பானுக்கான தூதுவராக நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. போர்க் குற்றங்கள் தொடர்பில் அவரது பெயரும் சம்பந்தப்பட்டிருப்பதால் அவரது நியமனத்தையிட்டு பிரித்தானியா அதிருப்தி வெளியிட்டிருந்தது.

இந்தப் பின்னணியில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகம மற்றும் முன்னாள் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க ஆகியோருடைய பெயர்களும் பிரித்தானிய தூதுவர் பதவிக்கு நியமிக்கப்படக்கூடியவர்கள் என பரிசீலனைக்கு உட்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய தூதுவர் நியமிக்கப்படும் வரையில் தற்போதைய பிரதித் தூதுவர் பி.எம்.அம்சா பதில் தூதுவராகக் கடமையாற்றுவார் எனவும் வெளியுறவு அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் இவ்வாரத்துடன் ஓய்வு பெறும் நிஹால் ஜெயசிங்க லஞ்ச ஆணைக் குழுவின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அந்தப் பதவியை அவர் ஏற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்குப் பதிலாக கம்போடியாவுக்கான தூதுவராக அவர் நியமிக்கப்படலாம் எனத் தெரிகின்றது. (ந-5)

# சந்தேகத்திற்கு இடமாக நடமாடியவரை இளைஞர்கள் மடக்கிப் பிடித்தனர்

## இருபாலையில் நேற்று மாலை சம்பவம்

(கோப்பாய்)

இருபாலைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரை அப்பகுதி இளைஞர்கள் மடக்கிப் பிடித்து இருபாலைச் சந்தியில் உள்ள இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இந்நபர் மட்டக்களப்பு கல்முனையைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சம்பவத்துடன் தொடர்புடைய பிரஸ்தாப இளைஞன் கோப்பாய் பகுதியிலுள்ள தனியார் கம்பனி ஒன்றில் தொழில்புரிவதற்காக இருபாலைக்கு வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இருபாலை கிழக்கு வீதியில் தனிமையில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரை இவர் பின் தொடர்ந்து சென்றதாகவும் இது தொடர்பில் அப்பெண் அப்பகுதி இளைஞர்களிடம் தெரிவித்ததையடுத்து அவர் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.

எனினும் இளைஞர்கள் அவரைத் துரத்திப் பிடித்து இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவத்தினை விசாரித்த இராணுவத்தினர் சந்தேக நபரை நையப்புடைத்து கடுமையாக எச்சரித்ததுடன் அவரை உடனடியாக அவரின் சொந்த இடமான கல்முனைக்கு அனுப்பி வைத்தனர். (ந-7)

## நெல்லியடி ம.ம.வி 10ந் திகதி ஆரம்பம்

(பருத்தித்துறை)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுவதால் பாடசாலையின் முதலாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 10ம் திகதி ஆரம்பமாகும் என அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார். (ந-7)

## கத்தியால் குத்திவிட்டு நகைகள் அபகரிப்பு

சங்குவேலி தெற்கில் நேற்றுமுன்தினம் அதிகாலை தனித்திருந்த பெண் ஒருவரை கத்தியால் குத்திய கொள்ளையர்கள் அவரிடமிருந்து நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் திருமதி சிவநேசன் (வயது 45) என்பவரே கொள்ளையர்களின் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-5)

# தேசிய கீத மொழி குறித்து இனங்களிடையே பிரச்சினை ஏற்படுத்த வேண்டாம்

## மல்வத்த அனுநாயக்க தேரர் பிரதமரிடம் தெரிவிப்பு

தேசிய கீதம் பாடப்படும் விவகாரம் குறித்து இனங்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்த வேண்டாம் என மல்வத்த பீடத்தின் அனுநாயக்க தேரரான நியங்கொட விஜிதசிறி தேரர், பிரதமர் டி.எம்.ஜயரட்ணவிடம் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் டி.எம்.ஜயரட்ண, மல்வத்த பீடத்தின் அனுநாயக்க தேரரை நேற்றுச் சந்தித்தார். இச்சந்திப்பின் போதே அனுநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தேரர் கூறியதாவது,


தேசிய கீதத்தை தமிழில் பாடுவதில் பெரும் சிரமங்கள் இருப்பின் தேசிய கீதத்தை இசையால் மட்டும் இசைக்கமுடியும். தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்கு அரசியலமைப்பில் இடமளிக்கப்பட்டுள்ளது.

தேசிய கீதம் இசைக்கும் போது மகா சங்கத்தினர் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டுமா இல்லையா என்பது பற்றி மகாநாயக்க தேரர்களுடன் ஆராயுங்கள்.

இந்தியா போன்ற நாடுகளில் தேசிய கீதம் இசைக்கும்போது மகாசங்கத்தினர் உட்பட மதத் தலைவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்துவதாகவும் அதில் தவறு எதுவுமில்லை என்று அனுநாயக்க தேரர் இங்கு குறிப்பிட்டார். (ந-5)

# இந்தியாவுக்கு எதிராக இலங்கை செயற்படாது

## கூறுகிறார் அமைச்சர் பௌசி



எந்த நாட்டின் அழுத்தங்களுக்கும் அடிபணிந்து இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு எதிராக செயற்படபோவதில்லை என அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளதாவது,

வடக்கில் யுத்தப் பாதிப்புக்கு உள்ளான தமிழ்ப் பிரதேச அபிவிருத்திக்கு இந்தியாவின் பங்களிப்பை இலங்கை அரசாங்கம் அதிகம் எதிர்பார்க்கின்றது.

இலங்கை தமிழர்கள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் தமிழக முதல்வர் மு.கருணாநிதி ஆகியோருக்கு இடையில் சிறந்த உறவு ஒன்று காணப்படுகின்றது.

விரைவில் தமிழர்கள் அபிவிருத்தி கண்டு பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

இதன்போது கருத்து தெரிவித்த மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா இலங்கை அரசாங்கமும் தமிழ் மக்களும் கடந்த கால சம்பவங்களை மறந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும் எனவும் இனி எதிர்காலத்தில் நடைபெற வேண்டியவை குறித்து சிந்திக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)




வீடு விற்பனைக்கு

மானிப்பாயில் 4.2 பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் 5 அறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. (16 தென்னை, 7 பலா, 4 மாமரங்களைக் கொண்டதும், மாதாந்தம் 2500/= - 3000/= வருமானம் பெறக் கூடியதும், கிணறு, TANK, MOTOR வசதிகளுடைய காணி) 5 நிமிடம் நடந்துசெல்லும் தூரத்தில் கோயில்கள், வைத்தியசாலை, பிரதான வீதி, பஸ்தரிப்பிடம், வங்கிகள், சுப்பர் மார்க்கட் ஆகிய சிறந்த சுற்றுச் சூழலில் அமைந்துள்ளது.
தொடர்புகொள்ளவும். TEL - 0112360135
MOB - 0755002618 E-mail - transworlde@sltnet.lk
(த-2037)

சித்திரம்
A/L 2013 பிரிவு
ஆரம்பம் : 03-01-2011
மற்றும்
தரம் 04-O/L,A/L வரை
வகுப்புகள் நடைபெறுகிறது.
IAT சித்திரப்பயிற்சி நிறுவனம்
ஆத்திசூடி வீதி கந்தர்மடம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகில்)
(3345)

வீடு வாடகைக்கு தேவை
யாழ்.நகரிலிருந்து 5Km க்கு உட்பட்ட பிரதேசத்தில் வீடு வாடகைக்கு தேவை. திருநெல்வேலி, கொக்குவில், கல்வியங்காடு போன்ற பிரதேசங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புக்கு: 0772246743
(த-2038)

# இன்று ஒரு தகவல்

## அகத்தூய்மை

"எப்பொழுதும் தூய்மையாக இருக்க வேண்டும். அதுதான் நல்லது" என்றார் ஒருத்தர்.

''நான் அப்படித்தான் தினமும் இரண்டு வேளை சோப் போட்டுக் குளிக்கிறேன்"என்றார் இன்னொருத்தர்.

"உடம்பு மட்டும் தூய்மையாக இருந்தால் போதாது.மனமும் தூய்மையாக இருக்க வேண்டும்" என்றார் அவர்.

"மனத்தை தூய்மைப்படுத்துவதற்கு என்ன சோப் போடலாம்?" என்று கேட்டார் இவர்.

''ஆன்மீகம்,என்ற சோப் தான் அதற்குப் பொருத்தம்'' என்றார் அவர்.

ஆன்மாவை மேம்படுத்தும் ஒரு முயற்சிதான் ஆன்மீகம்.

அந்த முயற்சியை எப்படிச் செய்வது?

மனதுக்குள் குந்தியிருக்கும் வேண்டாத விருந்தாளிகளை யெல்லாம் வெளியேற்ற வேண்டும். அப்படிப்பட்ட வேண்டாத விருந்தாளிகளில் மிக முக்கியமானவர் 'பொறாமை'

இவர் நம் மனதில் இருக்கிறவரைக்கும் நாம் நிம்மதியாக இருக்க முடியாது.

ஒரு குருநாதர் இருந்தார். அவரிடம் இரு சீடர்கள் இருந்தார்கள். இருவரும் ஆரம்பத்தில் ஒருவருக்கொருவர் நல்லபடியாகத்தான் பழகிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் என்னமோ தெரிய வில்லை. சிறிது நாட்களில் அந்த இருவரில் ஒருத்தனின் மனதுக்குள் பொறாமை என்ற விருந்தாளி வந்து உட்கார ஆரம்பித்துவிட்டார். அந்த சீடனும் அதற்கு இடம்கொடுத்து விட்டான்.

குருவிடம் தான் நல்ல பெயர் வாங்கவேண்டும் என்றும் தன் நண்பன் கெட்டபெயர் வாங்கவேண்டும் என்றும் அவனுக்கு ஒரு ஆசை உண்டானது.

என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

ஒரு நாள் விடியற்காலையில் எழுந்தான். நேராக குருவிடம் போய் அவருக்கு முன் நின்றான்.

"குருவே! என்னைப் பாருங்கள். நான் எவ்வளவு சீக்கிரமாக எழுந்து குளித்து முடித்து விட்டு உங்களை வணங்குவதற்காக வந்து நிற்கிறேன். ஆனால் அவன் இன்னும் கண் முழிக்கவில்லை. தூங்கிக் கொண்டே இருக்கிறான்'' என்றான்.

குருநாதர் நிமிர்ந்து பார்த்தார்.

"அப்படியா? அப்படியானால் நீயும் கூட அவனை மாதிரியே தூங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே" என்றார் மிகவும் பொறுமையுடன்.

"என்ன இது? நாம் எவ்வளவு தீவிரமாக ஒரு விடயத்தை சொல்கிறோம். அதற்கு நம்குருநாதர் மிகவும் பொறுமையாக இப்படி சொல்கிறாரே" என்று நினைத்தான்.

ஆச்சரியமாக அவரைப் பார்த்தான். குருநாதர் சொன்னார். ''ஆமாம். நீயும் தூங்கிக் கொண்டு இருந்திருந்தால் அடுத்தவனைப் பற்றி குறை சொல்வதற்கு இங்கே வந்திருக்கமாட்டாய். இல்லையா? அதனால் அப்படி சொன்னேன்" என்றார்.

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அர்த்தம் புரிந்தது. உடனே பொறாமையை மனதிலிருந்து தூக்கியெறிந்தான்.

மனம் தூய்மையானது.

மனதுக்குள்ளிருந்து விரட்ட வேண்டிய இன்னொரு விருந்தாளி கோபம். 'சினம் தன்னையே கொன்றுவிடும்'என்றார் வள்ளுவர். கோபத்துக்கு மனதில் இடமே கொடுக்காத சில பெரியவர்களும் உண்டு.

குருநாதர் என்று ஒருத்தர் இருந்தார்.

அவர் ஒரு சமயம் கோதாவரி நதியில் போய்க் குளித்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் ஒரு மரத்தின் மேல் உட்கார்ந்திருந்த ஒருத்தன் அவர் மீது துப்பி விடுகிறான். இவர் உடனே திரும்பி போய் மறுபடியும் குளித்து விட்டு வந்தார்.

இப்படி பல தடவைகள் நடந்துகொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில் அந்த ஆள்தோற்றுப்போய் அவர் காலில் வந்து விழுந்தான். ஆச்சரியப்பட்டு"நீங்கள் கோபப்படாமல் இருந்தீர்களே. அது எப்படி?" என்றான். அதற்கு அந்தப் பெரியவர் சொல்கிறார்.

"நான் கோபப்பட்டிருந்தால் என் மனம் அசுத்தமாகி இருக்கும். உடம்பு அசுத்தமானால் குளித்து சுத்தப்படுத்திக் கொள்ளலாம் மனதை அப்படி சுத்தப்படுத்த முடியாது" என்றார்.

ஆக, மனம் அசுத்தமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை. (மனதை அசுத்தப்படுத்தும் இன்னொரு விடயம் – சுயநலம்.)

ஒரு சுயநலவாதி ஆற்றில் விழுந்துவிட்டார். சுழியில் சிக்கிக் கொண்டார். இன்னொரு சுயநலவாதி தரையிலிருந்து இதைப் பார்த்தார். ஒரு கயிற்றை தூக்கிப் போட்டு அதை பிடிக்கச் சொல்லி கரையில் இழுத்து காப்பாற்றினார். அவர் கரையேறியவுடன் இவரைப் பார்த்து என்னைக் காப்பாற்றியதற்காக உங்களுக்கு ''50 காசு கொடுக்கலாம் என்று பார்க்கிறேன். ஆனால் என்னிடம் ஒரு ரூபாயாக இருக்கிறது" என்றார்.

உடனே காப்பாற்றினவர் இவரைப் பார்த்து,

"அப்படியானால் நீங்கள் இன்னொரு தடவை தண்ணியில் விழுந்து விடுங்கள். நான் காப்பாற்றுகிறேன். ஒரு ரூபாயாக கொடுத்துவிடலாம்'' என்றார். இப்படிப்பட்டவர்களெல்லாம் எத்தனை தடவை தண்ணீரில் விழுந்தாலும் மனம் தூய்மையாவதில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பதிலீட்டு அடிப்படையில் கிளி, துணுக்காய் வலயங்களுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம்

வடமாகாண கல்வித் திணைக் களத்தினால் 2010 ஆம் ஆண்டு மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரிய இடமாற்றத்திற்கு பதிலீடாக மேலும் 27 ஆசிரியர்கள் கிளிநொச்சி மற்றும் துணுக்காய் கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்றுமுதல் தமது கடமைகளை பொறுப்பேற்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் விபரம் வருமாறு;

**துணுக்காய் வலயம்**

ஜி.உதயகுமார் ( யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தி.), ஐ.ரமேசன்(யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி), ஜே.கெனிற் மேனன்(யா/சென்.றொக்ஸ் மகா வித்தி.), செல்வி எம்.சுப்பிரமணியம்(யா/வண்ணைநாவலர் வித்தி, ஆர்.லிங்கராஜ் (யா/ திருக் குடும்ப கன்னியர்மடம்), ஆர். நாகேஸ்வரன் (யா/ அத்தியார் இந்துக் கல்லூரி),எஸ்.டிகுகுமார் (யா/ ஊரெழு கணேசா வித்தி), ஆர்.தேவகுமாரன் (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), எஸ். வசந்தராஜா (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), எஸ்.சுதாகர் (யா/பாஷையூர் சென்.அன்ரனிஸ் பெண்கள் வித்தி.), எவ்.அருட்செல்வன் (யா/ கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தி.), ஜே. பிரபாகரன் (யா/வைத்தீஸ்வரர்க் கல்லூரி) , கே.உமாகரன் (யா/கோப்பாய் தெற்கு ஸ்கந்தவேல் வித்தி.), ரி.சிறிச்சந்திரகுமார் (யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.)

**கிளிநொச்சி வலயம்**

என்.டொமினிக் ஜீவா (யா/சென்.சாள்ஸ் மகா வித்தி), வி.அன்பழகன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை),செல்வி எம்.ஏ. மேரிறீற்றா (யா/சென். ஜேம்ஸ் மகா வித்தி), திருமதி. ஏ.எம்.றொமேஸ் (யா/முத்துத்தம்பி மகா வித்தி), செல்வி என்.நளினி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),கே. குகரன் (யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.), கே. ராஜலிங்கம் (யா/இந்துஆரம்பப் பாடசாலை),ஆர்.சிவபுத்திரன் (யா/முத்துத்தம்பி மகா வித்தி), செல்வி. வி.சக்திவேல்(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), செல்வி பி.கணேசலிங்கம் (யா/கோண்டாவில் பரஞ் சோதி வித்தி.), செல்வி ஆர். சிவப்பிரகாசம் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), செல்வி வி. கிரிதகரன் (யா/ கோப்பாய் நாவலர் வித்தி செல்வி எஸ்.இந்திரகுமார் (யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை) (ஸ்ரீ-2-4)

# ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் ஸ்ரீரங்கநாத பெருமாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா ஆரம்பமாகி இராம நாம ஜெபம், அபிஷேக ஆராதனைகள், விசேட பூசை வழிபாடு, சமயச் சொற்பொழிவு, ஸ்ரீராமர் ஆஞ்சநேயர் உள்வீதி வலம் வருதல் போன்ற சிறப்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இப்பூசையில் அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆஞ்சநேயப்பெருமானின் திருவருட்கடாட்சம் பெறுமாறு ஆலய பரிபாலனசபையினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-3)

# மின்சாரம் தடைப்படும் வேளைகளில் திருட்டு

பருத்தித்துறையில் மின்சாரம் தடைப்படும் வேளைகளில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

புலோலி மேற்கிலுள்ள வீடொன்றுக்குள் கடந்த 29 ஆம் திகதி இரவு 8 மணியளவில் மின்சாரம் தடைப்பட்ட வேளையில் புகுந்த திருடனொருவன் மின்தடை நீங்கியதும் தப்பியோடிவிட்டான்.

மறுநாள் அதே பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் மின்சாரம் தடைப்பட்ட வேளையில் மதில் பாய்ந்து உள்ளே சென்று மின் தடை நீங்கியதும் தப்பியோடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களால் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். (ஸ்ரீ-3-10)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 110 | 220 | 250 | 230 |
| தக்காளி | 50 | 80 | 100 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 70 | 100 | 70 |
| கரட் | 80 | 80 | 100 | 90 |
| பூசணி | 40 | 50 | 40 | 35 |
| புடோல் | 50 | 90 | 100 | 90 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 50 |
| சின்னவெங்காயம் | 200 | 250 | 220 | 210 |
| பெரியவெங்காயம் | 180 | 190 | 160 | 150 |
| பாகற்காய் | 100 | 180 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 80 | 60 |
| கருணைக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| பயற்றங்காய் | 160 | 180 | 180 | 170 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 | 100 |
| பீற்றூட் | -- | 100 | -- | -- |
| கறிமிளகாய் | -- | 200 | 280 | 230 |
| முருங்கைக்காய் | -- | 300 | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 160 | 130 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 150 | 100 |
| கீரை - 1 பிடி | 15-20 | 50 | 50 | 35 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 100 |
| தேங்காய்(ஒன்று) | 40 | 50 | 50 | 40 |

# இராசி பலன்

*03.01.2011*
*(மார்கழி 19, திங்கட்கிழமை)*
*சதுர்த்தசி பிற்பகல் 3.00 மணிவரை*
*மூலம் பின்னிரவு 3.30 மணிவரை*
*இராகுகாலம் 8.00-9.30 மணிவரை*
*சுபநேரம் 12.30-2.00 மணிவரை*
*போதாயன அமாவாசை.*

**மேடம்** உடல்நலம் சீராகி உற்சாகப் படும், தந்தைவழி உறவினர் மூலம் அனுகூலமான தகவல்கள் வந்து சேரலாம், நல்ல நண்பர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**இடபம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர்களுடன் பேசும் போது நிதானம் தேவை, பிரயாணத்தில் பொருட்களில் கவனமாக இருப்பது நல்லது.

**மிதுனம்** இல்லத்தில் நல்ல சம்பவமொன்று நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், கடந்தகால நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயரும், கௌரவமான நாள்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறைவடையும்.

**சிங்கம்** பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம், அரைகுறையாக இருந்த பணியை மீண்டும் தொடர்வீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் சிறு ஆதாயம் கிடைக்கலாம்.

**கன்னி** சுபசெய்திகள் வந்து சேரும் நாள், பெற்றோர் மீது பாசம் அதிகரிக்கும், பிரயாண சுகமுண்டு, சுப காரியத்திற்காக சில செலவுகளைச் செய்து மகிழ்வீர்கள்.

**துலாம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், உத்தியோகத்தில் உயர்வு கிட்டும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், சுவாரஸ்யமான நாள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்திதரும், சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், சுபநிகழ்வுகளில் புதிய நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** அலைச்சல் சற்று அதிகரிக்கும், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும், கனிவான பேச்சுகளால் காரியங்களைச் சந்திப்பீர்கள்.

**மகரம்** பயணத்தால் பலன் கிடைக்கும், இடமாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம்.

**கும்பம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், கௌரவமான உள்ளம் மகிழும் நாள்.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரும் நாள், பணத்தை சேமிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தூரதேசச் செய்தியால் உள்ளம் மகிழும் நாள்.

வளவன்



அமெரிக்க மிச்சிக்கன் ஸ்ரேற் பல்கலைக்கழக கல்வியாளர் குழு அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு விஜயம் மேற்கொண்டது. இந்நிகழ்வின் போது எதிர்கால கல்விசார் ஒத்துழைப்பு கூட்டுமுயற்சிகள் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்.என்.சண்முகலிங்கத்துடன் அக்குழுவினர் கலந்துரையாடுவதையும் பல்கலைக்கழகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

## விவசாயிகளை பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

வித்தகபுரம் விவசாய சம்மேளத்தினால் விவசாயிகளை பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 8 ஆம் திகதி பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே சகல விவசாயிகளையும் தங்கள் காணிகளைப் பதிவு செய்யுமாறு கீரிமலை கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## அந்தணர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும் நல்லூர் பிரதேச அந்தணர்களுக்கான கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சட்டநாத சிவன் கோவிலடி திவ்விய ஜீவன மண்டபத் தில் இவ் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ. ப.கோபாலகிருஸ்ணஐயர் கருத்துரை வழங்குவார்.

எமது அந்தண சமூக ஒற்றுமையைப் பலப்படுத்தவும் , குருத்துவம் அல்லாத அந்தணர்களையும் , பலசமூக நலத்திட்டங்களை வருங்காலத்தில் முன்னெடுக்கும் ஆரம்பகட்டமாக இக்கருத்தரங்கு அமைவதால் அனைவரையும் இதில் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ-2-9)

## ஆட்டோ- சைக்கிள் விபத்தில் யுவதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ-சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த யுவதியொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் மானிப்பாய்ச் சந்தியடியில் இடம் பெற்றுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரமின்றி ஆட்டோவை செலுத்தி வந்த ஒருவர் துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த யுவதி மீது மோதியதாக தெரியவருகிறது.

அத்துடன் இந்த யுவதியின் துவிச்சக்கர வண்டி நீண்ட தூரம் இழுத்துச் செல்லப்பட்டதுடன் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-6)

## நெல்லியடி ம.ம.வி 10 ஆம் திகதி ஆரம்பம்

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் தற்பொழுது இடம்பெற்று வருவதனால் எதிர்வரும் 10ஆம்திகதி திங்கட்கிழமை பாடசாலை ஆரம்பமாகும் என அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

## அல்லைப்பிட்டி பகுதியில் திருட்டுச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

வருடப்பிறப்புக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த இவ்வீட்டுக்காரர்கள் நள்ளிரவு 12 மணிவரை விருந்தினர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் நித்திரைக்குச் சென்ற போது தமது மோட்டார் சைக்கிளை வீட்டு விறாந்தையில் நிறுத்தியிருந்தனர். நள்ளிரவுக்குப் பின்னர் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை களவாடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை அதேவீதியில் சிறிய பல சரக்குக் கடையொன்றிலும் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான பலசரக்குப் பொருட்கள் உட்பட தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் என்பன களவாடப்பட்டுள்ளன.

அப்பலசரக்குக் கடையில் நின்றிருந்த மோட்டார் சைக்கிளை திருடர்கள் இயக்கிய போது அம்மோட்டார் சைக்கிள் இயங்காமையால் அதை அவ்வீட்டிற்கருகிலுள்ள வீதிவரை கொண்டுவந்து அவ்விடத்தில் விட்டுச் சென்றுள்ளனர்.

இப்பகுதியில் இவ்வாறான பல திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுவருவதாக அப்பகுதிமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். எனவே இத்திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4)

## சைக்கிள் திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய முக்கிய புள்ளி கைது

(கரவெட்டி)

வடமராட்சி பகுதியில் நீண்டகாலமாக துவிச்சக்கர வண்டிகளை களவாடிய குழுவின் முக்கிய சந்தேக நபர் நேற்று அல்வாய் கிழக்கு மாலுசந்திப் பகுதியில் பொதுமக்களினால் துரத்திப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பருத்தித்துறை நெல்லியடி நகரப் பகுதிகளிலும் மற்றும் கிராமங்களிலும் அதிகளவான துவிச்சக்கர வண்டிகள் நீண்ட காலமாக களவாடப்பட்டுவந்தன.

இச்செயற்பாட்டை திருட்டுக்குழுவினர் நீண்டகாலமாக களவாடி வந்துள்ளனர். நேற்றைய தினமும் அல்வாய் கிழக்குப் பகுதியில் தோட்ட வேலை செய்த தொழிலாளியின் புதிய சைக்கிளை களவாடிச் செல்வதை அவதானித்த தொழிலாளியும் அவருடைய சகாக்களும் நான்கு பேர் கொண்ட திருட்டுக் குழுவினரை துரத்திச் சென்ற வேளை 3 திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

அக்குழுவின் முக்கிய நபர் மாலுசந்திப் பகுதியில் வைத்துப் பிடிபட்டுள்ளார். அவரை நையப்புடைத்து விசாரணை மேற்கொண்ட போது தம்குழுவினர் 20 இற்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகளை இதுவரை களவாடியதாக அவர் தெரிவித்ததாக பொது மக்கள் கூறுகின்றனர்.

சந்தேக நபரை நெல்லியடிப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து கைது செய்து சென்றுள்ளனர். (ஸ்ரீ-3-24)

## விழிப்புக்குழு அமைப்பதன் மூலம் கொள்ளைகளை தடுக்க முடியும்

### யாழ்.மாநகர முதல்வர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் காரணங்களால் மக்களிடையே பதற்றநிலை தோன்றியுள்ளது. இந்நிலை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது.

இவற்றை நிறுத்த ஒவ்வொரு பகுதியிலும் விழிப்புக்குழு அமைப்பது அவசியம் என்பது ஏற்புடையதே.

இவ்வாறான விழிப்புக்குழு அமைப்பது தொடர்பாக யாழ்.மாநகரசபை முதல்வர் யோ.பற்குணராஜா தெரிவிக்கையில், யுத்த காலத்தில் யாழ்.மாவட்டத்தில் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படும் போது விழிப்புக் குழு அமைக்கப்பட்டிருந்தது. இதற்கு ஊர் மக்கள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

இதனால், கொலை , கொள்ளை மற்றும் பல அசம்பாவிதங்கள் தடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், இராணுவத்தினரும் இந்த விழிப்புக்குழுவில் உள்வாங்கப்படுவதால், 24 மணிநேரமும் ரோந்துப் பணியில் ஈடுபடுவதன் மூலம் இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறான மக்களின் விழிப்புக்குழு அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதன் மூலமே இந்த பதற்ற நிலையை மாற்றமுடியும் என பலர் கருத்துத் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-6)

## வேலி அமைப்பதற்கான முட்கம்பி வழங்கல்

(உடுப்பிட்டி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மையில் மீள்குடியேறிய விவசாயிகளின் நெற்பயிர்ச் செய்கை நிலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு வேலி அமைக்க 384 அந்தர் முட்கம்பி அம்பன் கமநல சேவை நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் வீட்டுத் தோட்ட பயிர் செய்கையில் ஈடுபடும் பயனாளிகள் 500 பேருக்கு வீட்டுத் தோட்ட பயிர் செய்கைக்கான விதை உள்ளீடுகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-3-52)




## வாகன விபத்தில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் மதிலுடன் மோதி காயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மதியம்1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த அ.ராஜேந்திரம் (வயது-53) என்பவரே காயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் ஆவார். (ஸ்ரீ-2-4)

## இந்திய அறிஞர்களின் கருத்தரங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் தமிழ்நாடு பாண்டிச்சேரி பல்கலைக்கழக பீடாதிபதி பேராசிரியர் சம்பந்தன் மற்றும் அப் பல்கலைக்கழக காந்திக கல்வி நிறுவன இயக்குநர் பேராசிரியர் மூர்த்தி ஆகியோர் இன்று காலை 10 மணிக்கு புவியியல் துறை விரிவுரை மண்டபத்தில் கருத்துரை வழங்கவுள்ளனர்.

பொருளியல்துறை தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் பேராசிரியர் சம்பந்தன் "உலகளாவிய நிதி நெருக்கடிகளின் விளைவுகளும், அமெரிக்க சீன நாடுகளுக்கிடையிலான நாணயப் போர்கள்" என்ற தலைப்பிலும், பேராசிரியர் மூர்த்தி "உலகளாவிய சமாதான வாய்ப்புகளும் 21 ஆம் நூற்றாண்டுக்கான சவால்களும்" என்ற தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர். இக் கருத்தரங்கில் ஆர்வலர்கள் கலந்து பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ)

# சேவை நலன் பாராட்டு

## வாழ்த்துச் செய்தி



அன்பும் பண்பும் மிக்க உயர்திரு.த.தர்மசோதி அவர்கள் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தினால் வெளியீடு செய்யும் சேவை நலன் பாராட்டு மலரூடாக வாழ்த்துவதில் பேருவகையடைகின்றோம்.

கடந்த 32 வருடங்களாக எமது மாணவச் செல்வங்களின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியமைக்காக மாகாணக் கல்வித்திணைக்களத்தின் சார்பில் நன்றி கூறுகின்றேன். அதிபர் தரம் 1 இனைச் சார்ந்த இவர் சுதுமலை சிந்மயபாரதி வித்தி யாலயத்தின் பௌதீகத் தேவைகளை கடின உழைப்பினால் நிறைவு செய்துள்ளார். ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் உயர்வை நெறிப்படுத்தியுள்ளார். தனது சேவையில் திருமலை, மன்னார் மாவட்டங்களிலும் கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் 10 வருடங்கள் பணியாற்றியமை சீரிய அம்சமாகும்.

எந்தநேரமும் புன்சிரிப்புடன் காட்சி தரும் அதிபர் தர்மசோதி அவர்கள் நீடிய ஆயுளுடன் நோய் நொடியின்றி குடும்பத்தினருடன் சந்தோஷமாக வாழ இறைவன் அருளைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.விக்கினேஸ்வரன்**
**மாகாணக் கல்விப்பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**

## ஆண்டவனுக்கு வகை கூறுபவர்



அண்மையில் ஒரு நிகழ்வு சுதுமலை சிந்மயபாரதி அதிபர் திரு.தம்பையா தர்மசோதி அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு விருந்துபசாரம். வருகை தந்திருந்த அனைவரும் அவரை, அவரின் சேவை நலனை விதந்துரைத்தனர். இறுதியில் திரு.த.தர்மசோதி அவர்களின் பதிலுரை அனைவரது கவனமும் அவர்பக்கம் திரும்பியது. "நான் ஆண்டவன் மீது நம்பிக்கையுள்ளவன். எனது செயற்பாடுகள் தொடர்பாக மற்றவர்களுக்கு வகை கூறுவதிலும் பார்க்க நாளைக்கு ஆண்டவனுக்கு வகைகூற வேண்டுமென்றார்" இவ்வுரை அனைவரது மனதிலும் ஆழமான பதிவை ஏற்படுத்தியது.

திரு.த.தர்மசோதி அவர்கள் எனக்குப் பரீச்சயமற்றவர். இரண்டொரு தடவைகள் சந்தித்துள்ளேன். உரையாடியுள்ளேன். அவரின் வெளிப்பாடுகள் யாவும் விரும்பத்தக்கனவாய் இருந்தன. அடக்கமான பண்பு, இதமான வார்த்தைப் பிரயோகங்கள், எவரையும் புண்படுத்தாத அணுகுமுறைகள், காணுந்தோறும் அன்பை வெளிப்படுத்தும் மலர்ச்சியான முகம் என அனைத்துமே விரும்பத்தக்கனவாய் இருந்தன.

முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர்கள் இருவர், எமது வலய கல்வி நிர்வாகிகள், அதிபர்கள் எனச் சிலரிடம் இவர் தொடர்பான மனப் பதிவுகளைப் பெற விளைந்தேன். அவர்களின் பதிவுகளை அப்படியேதருகின்றேன். "மிகவும் நல்ல அதிபர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என வாழ்ந்தவர், தான் சார்ந்த நிறுவனத்தை உயர்வாக நேசித்தவர். தனது முப்பது வருட கல்விச்சேவையை அப்பழுக்கற்ற முறையில் செய்தவர். மானிப்பாய் விவேகானந்தாக் கல்லூரியைக்கட்டி வளர்த்தவர். சுதுமலை சிந்மய பாரதிக் கல்விச் சமூகத்தின் அபரிமிதமான அன்பை பெற்றவர். எப்படி நோக்கினும் குற்றங்காண முடியாதவர்....." என விரிந்து கொண்டே சென்றது.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்.... நானும் மெய்ப்பொருளை தெரிந்து கொண்டேன். அவர்களின் கல்விப் பணிக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

**ஆ.ராஜேந்திரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் கல்விவலயம்.**


## உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



இவ்வித்தியாலயத்தில் எட்டு ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றி இன்று ஓய்வு பெறும் மணிவிழா நாயகன் திரு.த.தர்மசோதி அவர்களை வாழ்த்துவதில் பெருமிதமடைகிறேன். அவர் சேவைக்காலத்தில் இப் பாடசாலையை கல்வி அபிவிருத்தியிலும் பௌதீக வளங்களை பெருக்குவதிலும் நகரப் பாடசாலைகளுக்கு இணையாக்கி வியக்கத்தகு முன்னேற்றம் கண்டுள்ளார். கடினமுயற்சியினாலும் சிறந்த வழி காட்டலினாலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமை குறிப்பாகபுலமைப்பரிசில் பரீட்சையில் முதன்மைபெறுவது யாவரும் அறிந்ததே. அவ்வூர் மக்களின் குடும்ப்நிலையறிந்து, நெறிப்படுத்தி, நல்வழிகாட்டி, ஊக்கமளித்து, நல்லாசிரியராக, நல்லதிபராக பணிந்து ஊர்மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

திரு.தர்மசோதி அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியானதாகவும் பயனுள்ளதாகவும் அமைவதற்கு நல்லாரோக்கியத்துடன் நீண்ட ஆயுளையும் வழங்குமாறு சுதுமலை புவனேஸ்வரி அம்பாளின் அருளை வேண்டி அமைகின்றேன்.

**செ.குபேரநாதன்**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர் -உடுவில்**
**கோட்டக்கல்வி அலுவலகம்**
**மருதனார்மடம்**



## திரு.தம்பையா தர்மசோதி

**பிறந்த ஆண்டு: 03.01.1951**
**முதல் நியமனத்திகதி: 22.08.1979**

திரு/தம்பலகாமம் புதுக்குடியிருப்பு அ.த.க.பா
22.08.1979–30.05.1980 வரை (ஆசிரியர்)

திரு/முள்ளிப்பொத்தானை விக்கினேஸ்வரா வித்தி.
01.06.1980–31.01.1983 வரை (ஆசிரியர்)

யா/பலாலி ஆசிரியர் கலாசாலை
01.02.1983–31.02.1984 வரை (ஆசிரியர்)

மன்/காக்கையன் குளம் ம.வி
01.01.1985–30.05.1987 வரை (ஆசிரியர்)

மன்/இரணை இலுப்பைக்குளம் அ.த.க.பா.
01.06.1987–17.10.1990 (பதில் அதிபர்)

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
18.10.1990 – 30.05.1993 வரை (ஆசிரியர்)

யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
01.06.1993–24.03.2002 வரை (அதிபர்)

யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்
25.03.2002 – 02.01.2011 வரை (அதிபர்)

## வாழ்த்துச் செய்தி



திரு.தம்பையா தர்மசோதி அதிபர் அவர்கள் முப்பத்திரண்டு வருடங்களுக்கு மேலாக கல்விப்பணியாற்றி ஓய்வு பெறும் இவ்வேளையில் அவர்களை வாழ்த்தக்கிடைத்த சந்தர்ப்பத்தினையிட்டு பெருமையடைகின்றேன். நல்ல சைவப் பழக்கவழக்கம் மிக்க குடும்பத்தில் உதித்து தனது வாழ்க்கையிலும் அவற்றினைக் கடைப்பிடித்து வருபவர்.

கடமையே கண்ணாக இருந்து நல்ல மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். இவரது கல்விச் சேவையின் இறுதியில் யா/ மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயத்திலும் யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்திலும் அதிபராக இருந்து அப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றினார். இவரது சேவையினால் இவ்விரு பாடசாலைகளும் உயர் நிலையில் நிற்கின்றன. சமூகப் பணிகளிலும் திறம்படச் செயலாற்றுபவர். இவ்வாறான பெருமை மிக்கவரின் ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.

**சி.கந்தசாமி**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர்,**
**சண்டிலிப்பாய்.**

## அர்ப்பணிப்புள்ள அதிபர்



மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் நல்லொழுக்கத்திலும் மிகுந்த அக்கறை கொண்டு தனக்கு கிடைத்த சேவையினை அர்ப்பணிப்புடன் வழங்கியவர் அதிபர் திரு.த.தர்மசோதி அவர்கள்.

சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும் ஒன்றிணைந்த உணர்வுடன் பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்த பெருந்தகை. தனது ஓய்வுக் காலத்தில் நலமாகவும் மனமகிழ்வுடனும் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பிரதிஅதிபர்**
**திருமதி.க.சிவசுப்பிரமணியம்**

## சர்வதேச இந்துமத பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



திரு.தம்பையா தர்மசோதி அவர்கள் கடந்த எட்டு வருடங்களாக இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி இன்று ஓய்வு பெறுவதையிட்டு வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக.

இவர் ஒழுக்கம், ஒழுங்குவிதிமுறைகளை கடைப்பிடித்து அனைவரிடமும் இன்முகத்துடன் பழகுவார். தன் சேவை க்காலத்தில் பெற்றோர், ஆசிரியர், சமூகம் என அனைவரி டமும் நன்மதிப்பைப் பெற்ற உத்தமர். அதிகளவு மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைய வழிகாட்டியதுடன் பாடசாலை யின் அபிவிருத்தி வேலைகளிலும் நேர்மை, கண்ணியத்துடன் முன்னின்று செயற்பட்டார். விளையாட்டு மைதானம் அமைப்பதில் பெரும்பாடுபட்டவர்.

அவர் இளைப்பாறினாலும்கூட ஓய்வு நேரங்களில் ஆலோசனைகளையும் அறிவூட்டல்களையும் இப்பாடசாலைச் சமூகத்திற்கு வழங்க வேண்டுமென கூறி அவர் பல்லாண்டு காலம் நலமே வாழ அம்பிகையை வணங்கி என் நல்லாசியையும் வாழ்த்துக் களையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

**சிவ ஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்**
**சர்வதேச இந்துமத பீடாதிபதி**

## பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



முப்பத்தொரு வருட கல்விச் சேவையை பூர்த்தி செய்து அகவை அறுபதில் இளைப்பாறிச் செல்லும் சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய அதிபர் திரு.தம்பையா தர்மசோதி அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை அணிகலன்களாக கொண்ட முன்மாதிரியான கல்வியியலாளர் மாணவரிடத்து நல்லூக்கம், நற்பண்பு, நலமேம்பாடு, விரிசிந்தனை ஏற்படுத்துவதில் இலட்சிய தாகமுடையவர். மலர்ந்த முகமும் இறைசிந்தனையும் பிறர் மனம் நோகாப் பெருந்தன்மையும் கொண்டவர்.

மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயத்திலும் சுதுமலை சிந்மய பாரதி வித்தியா லயத்திலும் கல்வித்தடத்தை ஆழப் பதித்தவர். இப் பாட சாலைகளின் பௌதீகத்தேவைகளை நிறைவு செய்து கவி நிலைத் தன்மையை மெருகூட்டியவர். கல்வி அடைவுப் பேறுகளும் இணைபாடவிதான செயற்பாடுகளும் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. குறிப்பாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகளை ஈட்டும் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக இப்பாடசாலை வளர்ச்சி பெற்றது.

இவரது எதிர்கால வாழ்வு சிறப்புற்று மேலோங்க எனது நல்லாசிகள்.

**சுந்தரசிவம்**
**பிரதிக் கல்விப்பணிப்பாளர்,**
**வலிகாமம் கல்வி வலயம்.**

## வாழ்த்துச் செய்தி



தூரநோக்கு சிந்தனையினைத் தன்னகத்தே கொண்டு தனது கல்விச் சேவையை சமூகத்திற்கு வழங்கிய மன நிறைவுடன் இளைப்பாறிச் செல்லும் எமது பாடசாலை அதிபர் திரு.தம்பையா தர்மசோதி அவர்கள் எமது பாடசாலைக்கு அரும் பெரும் சேவையை ஆற்றி உள்ளார்.


பலவளக் குறைபாட்டுடன் இருந்த எமது பாடசாலைக்கு கட்டிட வளங்கள், கணனி அறை, நூலகவசதிகள், மைதானவசதிகள், மேலைத்தேய வாத்தியக்கருவிகள் போன்ற பல வளங்களை தமது சேவைக் காலத்தில் ஏற்படுத்தித் தந்துள்ளார்.

மேலும் எமது பாடசாலையில் மாணவர்களின் கல்வியில் மிகுந்த ஆர்வம் உடையவர். எமது பாடசாலை மாணவர்கள் மாவட்டம், மாகாணம், தேசியம் போன்றவற்றில் சாதனை படைப்பதற்கும் உறுதுணையாக நின்றவர். குறிப்பாக தரம் ஐந்து புலமைப்பரிசில், க.பொ.த (சா/த) ஆகிய பரீட்சைகளில் பாடசாலையை பெருமையடையச் செய்வதில் அயராது பாடுபட்டவர்.

இவரது எதிர்கால வாழ்வு சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.க.கலாமோகன்**
**யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்,**
**தலைவர்,**
**(ஆசிரியர் நலன்புரிச் சங்கம்).**

# பன்றிக் காய்ச்சல் நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்பது எப்படி ?



இன்புளுவென்சா H1N1 என்பது புளு (Flu) காய்ச்சல் போன்ற நோயாகும். இந் நோய் ஒருவரிலிருந்து இன்னொரு வருக்கு மூக்கிலிருந்து வெளியேறும் சளி மற் றும் இருமும் போதும் வெளியேறும் கிருமி கள் மூலம் தொற்றுகிறது.

இந்த நோய் முன்னர் பன்றிக் காய்ச்சல் என்றழைக்கப்பட்டது. ஆயினும் இந்நோய் பன்றிகளிலிருந்து தொற்றுவதில்லை என்ற காரணத்தால் இப்பொழுது "பன்றிக் காய்ச்சல்" என்றழைக்கப்படுவதில்லை.

இது ஒரு புதிய வகை வைரஸ் கிருமியி னால் ஏற்படும் நோய் என்பதால் பெரும் பாலான மக்கள் இந்நோய்க்கான எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருப்பதில்லை. இந் நோயானது மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது. சிறுபிள்ளைகள் மற்றும் இளம் வயதினர் மத்தியில் அதிகமாகப் பரவுகின் றது. இதற்கான குணம் குறிகளாக காய்ச்சல், தலையிடி, உடல்வலி, தொண்டைவலி, இருமல், மூக்கிலிருந்து சளி வடிதல், சில வேளைகளில் வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு ஏற்படும். இது சாதாரண தடிமன் போன்றது.

ஆகவே மற்றைய இன்புளூ வென்சா காய்ச்சல் வகைகளிலிருந்து வேறுபடுத்தி இனம் காண்பது கடினமானது. இந்நோய் சில நோயாளிகளிலிருந்து நியூ மோனியா காய்ச்சலாக மாறக்கூடிய வாய்ப் புண்டு. இவ்வாறு நியூமோனியாக் காய்ச்ச லாக மாறுமிடத்து மூச்சுவிடுதல் கடினமாக இருக்கும். மேலும் கடும் காய்ச்சலாகக் காணப் படக்கூடும் அல்லது காய்ச்சல் காணப்படா மலும் நோய் கடுமையாகும்.

இந்நோய்க்கான குணம் குறிகள் காணப் படின் குணம் குறிகள் அகலும் வரை நோயாளி படுக்கையில் ஓய்வெடுத்தல், சன நெருக்கடி மிகுந்த இடங்களைத் தவிர்த்தல், போசாக்கு மிகுந்த உணவு வகைகளையும் அதிகளவு நீராகாரங்களையும் உட்கொள் ளுதல், சவர்க்காரம் கொண்டு கைகளை அடிக்கடி கழுவுதல், தும்மும் போதும் இருமும் போதும் கைக் குட்டையை உபயோகித்தல் போன்ற செயற்பாடுகளை பின்பற்ற வேண்டும்.

பேப்பர் (டிசு) உபயோகிப்பின் அதை உரியமுறையில் அகற்ற வேண்டும். எக் காரணம் கொண்டும் கைகளை உபயோகிக் கக்கூடாது. கைகளின் மூலம் மற்றைய இடங் களில் தொடும்போது இவ்வைரஸ் அவ்விடங் களுக்கும் பரவக்கூடும். அரிதாக சிலரில் இந்நோய் முற்றி நியூமோனியாவாக மாறக் கூடும். அல்லது வலிப்பு ஏற்படக்கூடும்.

மேலும் தடு மாற்றம், மாறு பட்ட விழிப்புணர்வு ஏற்படக் கூடும்.

ஆ யி னு ம் , கடும் காய்ச்சல், மூச்சு விடுதல் கடினமாதல், மாறு பட்டவிழிப்புணர்வு, குணம் குறிக ளின் கடுமை அதிகரித்தல், உடற் சோர்வு ஆகிய குணம் குறிகள் காணப்பட் டால் வைத்திய ஆலோ சனை பெற வேண்டும்.



இந்த நோய் பற்றிய ஆய்வுகள் நோய் முற்றிய நோயாளிக ளுக்கும் நோய் ஆபத்து சாத்தியக்கூறுகள் அதிகமானவர்களுக்கும் மட்டுமே அவசியமா கும்.

இந்நோய் கடுமை யாகுமிடத்து அதை எதிர்கொள்ள தேவை யான வளங்களும் மருந்துகளும் நம் நாட்டில் உண்டு. இந் நோய்க்கு 2 வயதுக்கு உட்பட்டவர்கள், 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் கர்ப்பிணிகள், நீரிழிவு, ஆஸ்துமா, சிறுநீரக நோய், புற்றுநோய் உள்ளவர்கள், பிரட்னிச லோன் மருந்து நீண்டகாலமாகப் பாவிப்ப வர்கள் ஆகியோர் உட்படுமிடத்து அதிக கவனம் எடுக்கவேண்டும்.

### இந்நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி?

சன நெருக்கடி மிகுந்த இடங்களைத் தவிர்த்தல், சவர்க்காரம் கொண்டு அடிக்கடி கைகழுவுதல், வாய் மற்றும் மூக்குப் பகுதி களை தேவையின்றி தொடுவதைத் தவிர்த் தல், மூக்கால் நீர்/ சளி வடியும் நோயாளி களிடமிருந்து குறைந்தது ஒரு மீற்றர் தள்ளி நிற்றல், வீடுகளிலும் அலுவலகங்களிலும் யன்னல்களை திறப்பதன் மூலம் காற்றோட் டத்தை அதிகரிக்கச் செய்தல், முகமூடி உபயோகிப் பின் மூக்கையும் வாயையும் சரியான முறையில் அணியப்பட வேண் டும். தவறான உபயோகம் நோய் தொற்றும் சாத்தியக் கூறுகளை அதிகரிக்கும்.

வைத்திய கலாநிதி ஆர்.தெய்வேந்திரன்
சென்றல் நேர்சிங்கோம்,
திருநெல்வேலி.

நோய் தொற்றுதலைத் தவிர்க்க ஒரு சுகதேகி முகமூடி அணிவதைப் பார்க்கிலும் நோயாளி நோய் பரவுதலைத் தடுக்க முகமூடி அணிவது சிறந்தது.

# கட்சியின் தலைமைப் பொறுப்பை சஜித்திடம் ஒப்படைக்க ரணில் இணக்கம்



(கொழும்பு)

கௌரவமான முறையில் விலகிச் செல்வதற்கு போதியளவு கால அவகாசம் வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளதாக கட்சியின் சிரேஷ்ட பாராளு மன்ற உறுப்பினர் கபீர்ஹசீம் தெரிவித்துள் ளார்.

கட்சியின் எதிர்காலத் தலைமைப் பொறுப்பை சஜித் பிரேமதாஸவிடம் ஒப்படைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க இணங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் கபீர்ஹசீம் சஜித் தரப் பினர் மற்றும் ரணில் தரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகக் குறிப்பிடப் படுகிறது.

அண்மைக்காலமாக ஆப்கானிஸ்தானில் ஐக்கிய நாடுகள் அமைப்பை பிரதி நிதித்துவப் படுத்திய கபீர்ஹாசீம் நாடு திரும்பியுள்ள நிலையில் கட்சி உட்பூசல்களுக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் ஈடுபட்டு வருகின் றனர்.

இவர் வெளிநாட்டில் இருந்த காலப் பகுதி யில் இரண்டு தரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தும் முனைப் புக்களில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் போதி ரணசிங்க ஈடுபட்டு வந்தார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

குறைந்த பட்சம் எட்டுமாத காலத்தை ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டு டிசம்பர் மாதம் வரையில் கட்சித் தலைமைப் பதவியை வகிப்பதற்கு கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகி றது.



எவ்வாறெனினும் கட்சித் தலைமைப் பொறுப்பில் மாற்றத்தை ஏற் படுத்த நீண்ட காலம் காத்திருக்க முடியாதென அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை கட்சித் தலைமையில் மாற் றம் ஏற்படுத்தப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெய சூரிய ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. கட்சித் தலைமை தொடர்பில் கடந்த வாரத்தில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். (ஸ்ரீ-2)

# மாதாந்த ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு யாழ்.குடாநாட்டில் கற்றோர் சமூகத்தில் சிந்தனையைத் தூண்டவும் அபிவிருத்தியில் பங்களிப்பு பெறும் பொருட்டும் மாதாந்த ஆய்வரங்கு ஒன்றை நடத்தி வருகிறது.

அந்த வகையில் இம்மாத ஆய்வரங்கு எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். அரசடி வீதியில் உள்ள சொண்ட் நிறுவ னத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர்- வேல்நம்பி "குடாநாட்டில் புதிய தொழில் வாய்ப்புக்கள்" என்ற கருப்பொருளில் ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

எனவே ஆர்வலர்கள் அனைவரையும் பங்குபற்றி தங்கள் கருத்துக்களை முன் வைக்குமாறு சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# தற்காலிக இணைப்பில் பணியாற்றிய 57 ஆசிரியர்கள் கடமையை பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து தற் காலிக இணைப்பில் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் கடமைபுரிந்து வந்த 57 பேர் நேற்று முன்தினம் தமது கடமை களை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணி மனையில் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண் டனர்.

மேலும் மிகுதியாகவுள்ள ஆசிரியர்களும் தமது கடமையை பொறுப்பேற்றுக்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை மீள ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மீள இயங்கும் பாடசாலைகளில் ஆசிரியர் தேவைக் கேற்ப இணைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நேற்று முன்தினம் கடமைக்கு திரும்பிய ஆசிரியர்களுடன் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். கிருஷ்ண குமார் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையும் நடாத்தியுள் ளார். (ஸ்ரீ-2-4)

# உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் போட்டியிடுவது குறித்து நாளை முடிவு

## த.தே.கூ. அறிவிப்பு

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலிகளில் போட் டியிடுவது குறித்த இறுதித் தீர்மானம் நாளை செவ்வாய்க்கிழமை கூடும் கட்சியின் உயர் மட்ட கூட்டத்தின் பின்னர் முடிவு செய்யப் படும். இதனை மட்டக்களப்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.


வடகிழக்கிலுள்ள மட்டக்களப்பு, யாழ்ப் பாணம், கல்முனை மாநகர சபைகள் உட்பட அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நிச்சயம் போட்டியிடும் எனத் தெரிவித்த அவர்,

தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது, வேட் பாளர் தெரிவு, வேறு கட்சிகளுடன் இணைந் தா தனித்தா போட்டியிடுவது, மேயர், தவிசாளர் வேட்பாளர்களின் நியமனம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கள்ளிக்காட்டு இதிகாசம்



9



கவிப்பேரரசு வைரமுத்து

பேயத்தேவர் வீட்டு வாசலில் கூடி விட்டது கள்ளிப்பட்டியின் கணிசமான ஜனத்தொகை.

“ஏலே மொக்கராசு! எறங்குடா” பாட்டி அழகம்மாள் கெஞ்சினாள்.

“எறங்கமாட்டேன்! ஆத்தா கூடத் தான் போவேன்” மொக்கராசு முரண்டு பிடித்தான்.

“ஆத்தா போகட்டும். நம்மல்லாம் வெள்ளிக் கெழம போகலாம்” பேயத் தேவர் பொய்சொன்னார்.

“அப்ப ஆத்தாளும் இருக்கட்டும். வெள்ளிக்கெழம எல்லோரும் சேந்தே போகலாம்...” மொக்கராசு உறுதியானான்.

பேரன் பிடிக்கும் பிடிவாதம் கண்டு ஏந் தேவரே இவனுக்கு உடும்புக்கறி ஊட்டி வளத்திருப்பீகளோ...?” என்றார் ஆசாரி.

“ஏலே கொறண்டி! அவன எறக்கி விட்றா” வண்டிக்கரானுக்கு உத்தரவிட்டார் பேயத்தேவர்.

கொறண்டி தன் காய்த்துப்போன கைகளை அவன்மீது நீட்டுவதற்குள் கூண்டுவண்டியின் உட்கூடு பற்றிக் கொண்டு, “வரமாட்டேன் வரமாட்டேன்” என்று வெளவாலாய்த் தொங்கினான் மொக்கராசு.

வேண்டாத நாடகத்தை வெறுப் போடு பார்ப்பதுபோல் மப்பும் மந்தாரமுமாய் ஓர் ஓரமாயிருந்தான் ஒச்சுக் காளை.

அதுவரைக்கும் கண் கசக்கிக் கொண்டு புதுச்சேலை முந்தானையில் மூக்கு துடைத்துக் கொண்டிருந்த செல்லத்தாயி “வரட்டுமே ஏம்பிள்ள... ஒரு பத்துநாளைக்கு இருந்து வரட்டுமே!” என்று கண்ணீரில் வார்த்தை கரைத்தாள்.

“பயறா இருந்தாலும் பத்து நாளைக்கி வச்சுத் திங்கலாம்; இந்தப் பயல வச்சு என்ன பண்றது?”

அப்போதுதான் பற்றவைத்த பீடியைத் தரையில் போட்டு வெறுங்காலில் நசுக்கித் தன் கோபம் காட்டினான் ஒச்சுக்காளை.

“பொறப்பா... பெரியவுகாளப் பேசுன பேச்சு பிள்ளைக்கித் தெரியாதுல்ல. பொடிப்பய... கண்ணத் தொறன்னா வாயத் தொறக்கிறவன். கூட்டிட்டுப்போப்பா. கொலையா பண்ணிறப் போறான்...?” அடுத்த கல் எறிந்து பார்த்தார் ஆசாரி.

அவ்வளவுதான்; கோபத்தின் உச்சம் போனான் ஒச்சு. “குட்டிப்பாம்புன்னாப் பொட்டிக்குள்ளயா வச்சு வளப்பீக...? சம்பந்தம் பண்ணாதடா சனீஸ்வரன் வீட்லன்னு சொன்னாக... கேட்டானா...?”

தரைதழைந்த வேட்டியை, இடக்காலால் எத்தி உதறி எடுத்து இடுப்பில் இறுக்கிக் கட்டிக்கொண்டு “ஒங்க சங்காத்தமே வேணாம்...” என்று தெருகிழியக் கத்திக்கொண்டு ஒட்ட வேகத்தில் நடைகட்டினான் ஒச்சு.

அது வரைக்கும் அமைதிகாத்த பேயத்தேவர் வண்டிக்குள் தானே பாய்ந்தார்.

“ஏ வெளங்காமப் போனவனே! எறங்குடா!”

பேரனை வண்டியிலிருந்து பிய்த்தெடுத்தார். சிறுவன் கத்தினான்; கதறினான். வில்லாய் விறைத்தும் வளைந்தும் தப்பிக்கப் பார்த்தான். அவனால் அந்த வைரம் பாய்ந்த கைகளை விட்டு வர முடியவில்லை. இந்தக் கொடுமை உண்டுமா என்று ஊரே வேடிக்கை பார்த்தது.

“ஏய்! மருமகனை மடக்கிக் கூட்டிட்டு வாங்கடா! ஏ செல்லத்தாயி! நீ அழுகாம வண்டி ஏறாத்தா...” பேரனின் கூச்சலுக்கு மத்தியில் கட்டளையிட்டு விட்டு வண்டிக்கு எதிரான திசையில் பேரனைத் தூக்கிக் கொண்டு ஓட ஆரம்பித்தார் பேயத்தேவர். ஆத்தா! ஆத்தா! என்ற மொக்கராசு கதறலும் மொக்க! மொக்க! என்ற ஆத்தாவின் அழுகையும் தூரங்களால் பிரிந்து காற்றில் கரைந்த வேளையில் பேயத்தேவரின் தோள்களிலிருந்து கால்களை உதறி நெஞ்சில் வழுக்கித் தரையில் குதித்து ஒட்டமாய் ஓடினான் மொக்கராசு. வண்டி ஊர் கடந்து, ஊமையன் கிணறு தாண்டி, செம்மண் பாதையை விட்டுத் தார்ச்சாலை தொட்டுவிட்டது.

“ஆத்தா! ஆத்தா!”-மொக்கராசு முன்னேறினான்.

“நில்றா! நில்றா!”-பேயத்தேவர் பின்னோடினார்.

கல்லென்று பார்த்தானா? முள்ளென்று பார்த்தானா? குறுக்குப் பாதையில் நெருஞ்சிக்காட்டில் ஓடினான். ஒரே தவ்வு சீமக்கருவேலஞ்செடி தாண்டினான்.

ஒரு சுக்கான் பாறையில் தடுக்கிவிழுந்தான். ஒரு கத்திக்கல் வெட்டி ரத்தம் முழுங்காலில். என்னியவிட்டுட்டுப் போகாத ஆத்தா! என்னியவிட்டுட்டுப் போகாத ஆத்தா! என்று கதறிக் கொண்டோடிய அவனை அங்கணன் தோட்டத்தில் பார்த்தி கட்டிக் கொண்டிருந்த விடலைகள் பிடித்துப் பேயத்தேவரிடம் ஒப்படைத்தார்கள்.

“ஏலே தங்கம்... போனாப் போறாடா பொசகெட்ட சிறுக்கி. ஒனக்கு நாந்தாண்டா ஆத்தா... நாந்தாண்டா அப்பன்.

இருகையிலும் பேரனை ஏந்தி எடுத்துச் சென்றபோது பேயத்தேவரின் கண்களிலிருந்து வைரம் பாய்ந்த கண்ணீர் விழுந்ததில் அவன் காயம் எரிந்தது.

மொக்கராசின் உலகம் முடிந்துவிட்டது;

ஒரு பட்டாம்பூச்சியின் சிறகு விழுந்து விட்டது. சத்தம் இல்லை; சலனம் இல்லை; அவனுக்கென்று சம்பவங்கள் இல்லை. ஒத்தை வாத்தியார் பள்ளியிலிருந்து அவன் பெயர் எடுக்கப்பட்டுவிட்டது. சட்டை துவைக்கவில்லை; சாப்பிடவில்லை. அவனுக்குப் பிடிக்குமென்று அழகம்மாப் பாட்டி ஆசையாய்ச் செய்துகொடுத்த கருப்பட்டிப் பாலும் பணியாரமும் ஈ மொய்த்ததே தவிர அவன் வாய் வைக்கவில்லை. அவன் உயிரோடு இருந்தான்; அவன் உலகம் இறந்துவிட்டது. பெருசுகளுக்கு மெல்ல மெல்லக் கவலை வந்தது. ஆத்தாள் ஏக்கத்தில் அவன் ‘அரைஉசுர’ாகிவிட்டான் என்பது மட்டும் புரிந்து யார் மீது தவறு?


செல்லத்தாயி என்ன செய்வாள் சீவனில்லாத சிறுக்கி! பிள்ளைபிறந்து ஒன்பதாம் மாதம் தாலியறுத்த ஓர் இளம் பெண்ணுக்கு ஆறாண்டுக்குப்பிறகுதான் பூப்பூத்தது.

“எனக்கெதுக்குக் கல்யாணம்...? என் மண்டையப் பொறந்த எடத்திலயே போட்டுர்றேன்...” என்றுதான் அவள் முத்துமுத்தாய் அழுது மூக்கைச் சிந்தினாள்.

“போடி கிறுக்கி... ஒனக்கென்ன வயசா போச்சு? சாமக்காடு சாவியாப் போச்சுன்னா கானப்பயிறு வெதைக்கிறதில்லையா?

அப்பனும் ஆத்தாளும் அவளைத் தேத்தித்தேத்திப் பாதிச் சம்மதம் வாங்கினார்கள்.

(வளரும்)



# கடவுச்சீட்டை விற்பனை செய்த இலங்கைப் பெண் சிங்கப்பூரில் கைது

(கொழும்பு)

விசேட வெளிநாட்டு பயணக் கடவுச்சீட்டை வேறொருவருக்கு விற்ற குற்றத்துக்காக இலங்கையைச் சேர்ந்த சிங்களப் பெண்ணொருவர் சிங்கப்பூரில் கைதுசெய்யப்பட்டு 6 மாதங்கள் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

ரேணுகா சஞ்சீவனி மத்துமகே என்ற முப்பத்தெட்டு வயதுடைய பெண்ணே இந்தத் தீர்ப்புக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் அவர் தமது கடவுச்சீட்டை 600 சிங்கப்பூர் டொலருக்கு வேறொரு பெண்ணுக்கு விற்றதன் பின்னர் மீண்டும் கடந்த 30ஆம் திகதி அவர் தமது கடவுச்சீட்டு காணாமல் போனதாக சிங்கப்பூர் குடிவர திணைக்களத்தில் முறைப்பாடு செய்ய சென்றவேளையில் கைதுசெய்யப்பட்டார். பின்னர் நேற்று முன்தினம் அவர் தொடர்பிலான வழக்கு இடம்பெற்ற போது இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது

எனினும் அவர் தமது கடவுச்சீட்டை விற்பனை செய்தமை எவ்வாறு தெரியவந்தது என்பது குறித்து நீதிமன்றம் தகவல் எதனையும் வெளியிடவில்லை.

இதற்கிடையில் அவரிடமிருந்து கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்ட பெண் தொடர்பிலான விசாரணை இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# இந்திய மற்றும் பாகிஸ்தானிய படையதிகாரிகள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இலங்கை விமாப்படையின் 60 ஆவது நிறைவு நிகழ்வில் பங்கேற்பதற்காக இந்திய மற்றும் பாகிஸ்தானிய படையதிகாரிகள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இந்தியாவின் விமானப்படை தளபதி சீப் மார்சல் பிரதீப் வசந்த் நாயக் எதிர்வரும் 16 ஆம் திகதி ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு இங்கு வரவுள்ளார்.

கடந்த வருட இறுதியில் இலங்கைக் கடற்படையின் 60 ஆவது நிறைவில் பங்கேற்பதற்காக இந்திய கடற்படை தளபதி அட்மிரல் நிமல்குமார் வர்மா இலங்கை வந்திருந்தார். இதேவேளை பாகிஸ்தானிய இராணுவத்தின் தலைமையதிகாரி ஜெனரல் ஆஸ்பாக் கயானி எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

இவரின் விஜயம் கடந்த வருடம் இலங்கைக்கு வந்த பாகிஸ்தானிய ஜனாதிபதி ஆசிப் அல் சர்தாரியின் விஜயத்தின் பின்னரான தொடர்ச்சியாகவே இடம்பெறுகிறது. (ஸ்ரீ-2)

# வடக்கில் நேரடி ஆய்வுக்கு அமெரிக்கா முயற்சி

## அரசாங்கம் நிராகரிப்பு

(கொழும்பு)

புலிகளுடனான இறுதிக்கட்ட போரின் பின் வடக்கின் இழப்புகள் குறித்து நேரடி ஆய்வுக்கு உலக வங்கியூடாக அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்க மறுத்துள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கில் சனத்தொகைக் கணக்கெடுப்பொன்றை நடாத்தி அதன் மூலம் போரின் போது காயமுற்றவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள், மரணித்தவர்கள் உள்ளிட்ட தகவல்களை ஆவணப்படுத்த அமெரிக்கா முயற்சியொன்றை மேற்கொண்டது.

அதற்கான அமைச்சரவைப் பத்திரமும் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அமைச்சரவைக் கலந்துரையாடலின் போது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

வடக்கில் அவ்வாறான கருத்துக் கணிப்பொன்று நடத்தப்படும் பட்டசத்தில் அங்கு போரினால் இறந்த மக்கள் , காணாமல் போன மக்கள், காயப்பட்ட மக்கள் உட்பட பாதிப்புக்குள்ளானவர்கள் தொடர்பிலான விடயங்கள் ஆவணப்படுத்தப்படும் பட்சத்தில் அது அரசாங்கத்துக்கு எதிரானதாக பயன்படுத்தப்படலாம் என்ற அச்சமே அதற்கான காரணம் என்று அறியப்படுகிறது.

ஆயினும் வடக்கு மக்களின் பாதிப்புகளின் நிலவரம் தொடர்பிலான ஆய்வுகளை வேறு அமைப்புகளின் ஊடாக இராஜதந்திரிகளின் முயற்சியால் முன்னெடுக்க பல்வேறு தரப்பினரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# யாழ்தேவி இம்மாதம் முதல் ஓமந்தை வரை சேவையில்

(கொழும்பு)

தாண்டிக்குளத்துக்கும் கொழும்புக்கும் இடையில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள யாழ் தேவி புகையிரதம் இந்த மாதம் முதல் ஓமந்தை வரையான தமது பயணத்தை ஆரம்பிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

புகையிரத திணைக்களத்தை மேற்கோள் காட்டி பாதுகாப்பு அமைச்சு இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இதற்கான பாதை நிர்மாணப் பணிகள் முடியும் தறுவாயில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரையிலான 159 கிலோ மீற்றர் புகையிரத பாதை மீள் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பாதையின் ஊடாக 16 பிரதான புகையிரத நிலையங்களும் 12 துணை நிலையங்களுடன் 85 பாலங்களும் உள்ளன. இந்தியாவின் புகையிரத பாதை நிர்மாண நிறுவனம் இந்தப் பாதையை புனரமைத்து வருகிறது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் புதிய சமிக்ஞை முறைமை மற்றும் தொலைத் தொடர்பாடல் வலையமைப்பு முறைமை என்பனவும் உள்ளடக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தாண்டிக்குளத்தில் இருந்து ஓமந்தை வரையிலான புகையிரத பயணப்பாதை நிர்மாணப் பணிகள் இறுதி நிலையை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த மாத இறுதியில் இருந்து யாழ்தேவி புகையிரதம் ஓமந்தை வரையில் பயணிக்கக் கூடியதாக இருக்கும் என புகையிரத திணைக்களத்தை மேற்கோள்காட்டி பாதுகாப்பு அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சகல பாடசாலைகளும் முதலாம் தவணைக்காக இன்று திறப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் இவ்வருடத்திற்கான கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. இந்நிலையில் க.பொ.த.சாதார தரப் பரீட்சை மதிப்பீட்டு நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று ஆரம்பமாகும் தமிழ்த முஸ்லிம், சிங்கள பாடசாலைகள் இவ்வருடத்திற்கான முதலாம் தவணை விடுமுறைக்காக ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி மூடப்படும் என்பது குறிப்பிடப்படுகின்றது. (ஸ்ரீ-4)

# தமிழக சட்டசபைத் தேர்தலில் இலங்கை விவகாரம் தலைதூக்கும்

## வைகோ தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழக சட்டசபைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை போன்ற விவகாரங்கள் ஆளும் தி.மு.க. கூட்டணிக்கு எதிராக செயற்படும் என மறுமலர்ச்சி தி.மு.க.தலைவர் வைகோ நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

2ஜி அலைக்கற்றை ஊழல், இலங்கைத் தமிழர் விவகாரம் போன்றவை இத் தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கு பாதகமாக அமையும். 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு ஊழல் மூலம் கடந்த ஆண்டு ஊழல்களின் ஆண்டாக இருந்தது.

இவ்வாண்டு மாற்றங்களின் ஆண்டாக அமையும் என வைகோ தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான கடைசிக் கட்ட யுத்தத்தில் இலங்கை இராணுவத்திற்கு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி உதவியதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தண்டனையிலிருந்து தப்ப முடியாது எனவும் சர்வதேச தமிழ்ச் சமூகம் அவரை தப்ப விடாது எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



YOKO

நீர் இறைக்கும் இயந்திரம்

- ஒரு வருட உத்தரவாதம்.
- ஐந்து குதிரை வலு சக்தி கொண்டது.
- எரி பொருள் சிக்கனமானது.

இறக்குமதியாளர்கள்:
Micro Bytech International (Pvt) Ltd.
141/1, Highlevel Road,
Nugegoda.
Tel: 011-2815481

(C-3343)

# போர்க்குற்ற நீதிமன்ற நீதிபதியாக இலங்கையர் நியமனம்?

(கொழும்பு)

ஐ.நா.சபையின் போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையர் ஒருவர் நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைக்கு பிரித்தானியாவில் இலங்கைக்கான தூதராக இருக்கும் முன்னாள் நீதியரசர் நிஹால் ஜயசிங்கவே அவ்வாறு நியமிக்கப்படவுள்ளார் என்பதாக அத்தகவல் வட்டாரங்கள் மேலும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன.

ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் அலுவலகத்திலிருந்து அவருக்கான பதவி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கம்போடியாவின் (காம்போஜ்) போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் நீதிமன்றத்தின் நீதிபதியாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் 31 ஆம் திகதியுடன் தூதுவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டுள்ள நிஹால் ஜயசிங்க இன்னும் இரண்டொரு வாரங்களில் தனது புதிய பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கிழக்கு பல்கலையில் அருங்காட்சியகம்

(கொழும்பு)

வரலாற்றுச் சின்னங்களை அழிவிலிருந்தும் மறைவிலிருந்தும் பாதுகாப்பதற்காக கிழக்கு பல்கலைக்கழகத்தில் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் சமூகங்களின் பாரம்பரியம் தொடர்பான சின்னங்கள், பிற தொல்பொருட்கள் போன்றவற்றை தேடிப் பெற்று இங்கு காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தொல்பொருட் சின்னங்களான கல்வெட்டுகள், செப்பேடுகள், பழங்காசுகள், கல வோடுகள், மட்கலங்கள், உலோகக்கருவிகள், பாத்திரங்கள், விவசாயக் கருவிகள், கடற்றொழில் உலோக வேலைப்பாடு என்பன பற்றிய கருவிகள் வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்றன சேகரிக்கப்படவுள்ளன.

அத்துடன் கோயில்கள், பள்ளிவாயில்கள், விகாரைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியவற்றின் தொல்பொருட் சின்னங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. இவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

எனவே அருங்காட்சியகத்தை வளப்படுத்துவதற்காக இவற்றை நன்கொடையாக வழங்குமாறு கிழக்குப் பல்கலைக்கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி பொருட்களை வைத்திருப்பவர்கள் தலைவர், வரலாற்றுத் துறை கிழக்கு பல்கலைக்கழகம் என்ற முகவரியுடனோ அல்லது 065 2240490, 065 2240590, 065 2240002 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

# நாடும் நடப்பும்

## தக்கார் தகவிலர்

தன் பங்கு தானென்ன
வென முந்து மரசியலார்
தக்கார் தகவிலா ரென
அறி வதனைத் தகர்த்து
தலைவ னிவனென்று
சாற்றா திருப்பின்
என்னிருப்பி னிருப்
பிடறி விழ நேரு மென
என்றறி என்னிருப்பே!

அறியாதவன்

# பிச்சைக்காரர்களுக்கு புனர்வாழ்வளித்து நற்பிரஜைகளாக்கும் திட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பிச்சைக்காரர்களை இனங்கண்டு அவர்களுக்குப் புனர்வாழ்வளித்து எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் இவ்வருடம் முன்னெடுக்கவுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை விரைவாக செயற்படுத்துமாறு சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தனது அதிகாரிகளைப் பணித்துள்ளதுடன் இதற்கென ஒரு குழுவையும் நியமித்துள்ளார்.

தற்போது நாட்டிலுள்ள பிச்சைக்காரர்களை இனங்கண்டு அவர்களை விசேட புனர்வாழ்வு நிலையங்களில் தங்க வைத்துத் தேவையான தொழிற் பயிற்சிகளை வழங்குமாறும் அவர் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

புனர்வாழ்வு நிலையங்களில் பயிற்சி பெற்ற பின்னர் இவர்களுக்குச் சுயமாகத் தொழில் செய்யக் கூடிய வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# சப்ரகமுவ பல்கலை மூடப்பட்டுள்ளது

சப்ரகமுவ பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை சம்பவங்கள் இடம் பெற்றமையை காரணமாகக் கொண்டே இவ்வாறு பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் எச்.எம்.எஸ்.பிரியநாத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தினுள் பகிடிவதைகள் இடம்பெறவில்லை எனவும் பொய்யான காரணங்களை முன்வைத்து பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் தனுஸ்க திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடிவரவு நடவடிக்கைகள் நவீன மயமாக்கப்படவுள்ளன

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வு திணைக்களம் நவீன வசதிகளைக் கொண்ட ஆவண சேமிப்புத் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்த உள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சுலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

உத்தேசத் திட்டத்திற்கு அமைய கடவுச் சீட்டு விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், விண்ணப்பங்கள் கையேற்கப்பட்டதன் பின்னர் உடனடியாக விண்ணப்பதாரிகளிடம் கையளிக்கக் கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

புதிய முறைக்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த 2009 ஆம் ஆண்டில் 4 இலட்சத்து 84 ஆயிரத்து 967 கடவுச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதேவேளை கடந்த ஆண்டில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அம்பன் கமநலசேவை திணைக்களம் சொந்த கட்டடத்தில் இயங்கவுள்ளது

(உடுப்பிட்டி)

இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இதுவரை காலமும் இயங்கி வந்த அம்பன் கமநல சேவை திணைக்களம் தற்போது சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதியிலிருந்து இதற்கமைய நிரந்தரக் கட்டடத் தொகுதியில் தனது சேவையை ஆரம்பிக்க உள்ளது.

இத் திணைக்களத்தினால் வீதிகள் மற்றும் விவசாயக்குளங்கள் என்பன புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (ஸ்ரீ-4-52)

# பூசா முகாமில் தெரிவு செய்யப்பட்ட 20 கைதிகளிடமே விசாரணை

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பூசா முகாமில் 31 ஆம் திகதி நடத்திய விசாரணைகளின் போது, தெரிவு செய்யப்பட்டவர்களின் சாட்சியங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டதுடன் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட 20 கைதிகளிடம் மாத்திரம் விசாரணை நடத்தப்பட்டதுடன் தயாரிக்கப்பட்டிருந்த பட்டியல் ஒன்றுக்கு அமைவாக யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கைதிகளிடம் விசாரணை நடத்தப்பட்டதாகவும் எவரும் சுதந்திரமாக சாட்சியங்களை வழங்கவில்லை எனவும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-4)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.01
03

★ 1431 - பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் கைது செய்யப்பட்டு பியேர் கவுச்சோன் ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

★ 1754 - அம்பலபுழாவில் நடைபெற்ற சண்டையில் கொச்சி அரசரதும், நாடிழந்த ஏனைய அரசர்களினது கூட்டுப்படைகளைத் தோற்கடித்து அவரை எதிர்த்தவர்கள் அனைவரையும் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மர் முறியடித்தார்.

★ 1815 - ஆஸ்திரியா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியன இணைந்து புருசியா, மற்றும் ரஷ்யாவை எதிர்த்து இரகசிய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தின.

★ 1833 - போக்லாந்து தீவுகளை பிரித்தானியா கைப்பற்றியது.

★ 1859 - தமிழகத்தில் போளூர், பகுதியில் நிலநடுக்கம் பதியப்பட்டது.

★ 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பிரிவதில்லை என டெலவெயர் வாக்களித்தது.

★ 1870 - புரூக்ளின் பாலம் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாயின.

★ 1888 - 91 ச.மீ. முறிவுத் தொலைநோக்கி முதன் முறையாக கலிபோர்னியாவில் உபயோகிக்கப்பட்டது. இதுவே அந்நேரத்தில் உலகின் மிகப் பெரும் தொலைநோக்கி ஆகும்.

★ 1921 - துருக்கி ஆர்மேனியாவுடன் அமைதி உடன்பாட்டிற்கு ஒப்புக்கொண்டது.

★ 1924 - பண்டைய எகிப்தின் துட்டன்காமன் மன்னன் அடக்கம் செய்யப்பட்ட பெட்டியை பிரித்தானியாவின் தொல்லியலாளர் ஹவார்ட் கார்ட்டர் கண்டுபிடித்தார்.

★ 1925 - இத்தாலியின் ஆட்சி அதிகாரம் முழுவதும் தன்னிடம் உள்ளதாக முசோலினி அறிவித்தார்.

★ 1932 - பிரித்தானியர், மகாத்மாகாந்தி மற்றும் வல்லபாய் பட்டேல் ஆகியோரைக் கைது செய்தனர்.

★ 1947 - அமெரிக்கக் காங்கிரசின் அமர்வுகள் முதற் தடவையாக தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது.

★ 1956 - ஈபிள் கோபுரத்தில் ஏற்பட்ட தீயினால் கோபுரத்தின் மேற்பகுதி சேதமடைந்தது.

★ 1957 - முதலாவது மின்கடிகாரத்தை ஹமில்ட்டன் வாட்ச் கம்பனி அறிமுகப்படுத்தியது.

★ 1958 - மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது.

★ 1959 - அலாஸ்கா ஐக்கிய அமெரிக்காவின் 49ஆவது மாநிலமானது.

★ 1961 - அமெரிக்க அரசு கியூபாவுடனான இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்டது.

★ 1961 - இடாகோவில் அணுக்கரு உலை ஒன்றில் ஏற்பட்ட கசிவின் காரணமாக மூன்று தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

★ 1966 - இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்கும் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் டாஷ்கெண்டில் ஆரம்பமாயின.

★ 1974 - யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமானது.

★ 1977 - அப்பிள் கணனி நிறுவனமயப் படுத்தப்பட்டது.

★ 1990 - பனாமாவின் முன்னாள் ஜனாதிபதி மனுவேல் நொரியேகா அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தார்.

★ 1994 - ரஷ்யாவின் இர்கூத்ஸ்க்கில் இருந்து புறப்பட்ட விமானம் ஒன்று தரையில் மோதி வெடித்ததில் 125 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2004 - எகிப்திய விமானம் ஒன்று செங்கடலில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 148 பேரும் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★ 1740 - கட்டபொம்மன், ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட மன்னன் (இ. 1799)

★ 1956 - மெல் கிப்சன், அவுஸ்திரேலிய நடிகர்

★ 1969 - மைக்கேல் சூமாக்கர், ஜெர்மனியைச் சேர்ந்த பார்முலா 1 ஓட்டுநர்

### இறப்பு

★ 2005 - ஜே.என்.டிக்சித், இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (பி. 1936)

1995 - விடுதலைப் புலிகள் - இலங்கை அரசு பேச்சுக்களின் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது.

# 2011 புத்தாண்டு பலன்கள்

## உங்களுக்கு எப்படி?




*(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

வெற்றி வாய்ப்புகள் வீடு வரும்!

வேண்டும் அளவு பணமும் வரும்!

***வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு, வியக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் விருச்சிக இராசி நேயர்களே!***

புத்தாண்டு உங்களுக்கு பொன் கொழிக்கும் ஆண்டாக அமையப் போகிறது. முத்தான பலன்களை அள்ளி வழங்கும் விதத்தில் உங்கள் இராசியிலேயே 2011ஆம் ஆண்டு பிறந்துள்ளது. ஆண்டு முழுவதும் உங்களுக்கு ஆனந்த வாழ்க்கை அமையும்.

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியைக் குரு பார்க்கிறார். தன ஸ்தானத்தில் தொழில் ஸ்தானாதிபதி சூரியனுடன் இராசிநாதன் செவ்வாய் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே வேண்டிய அளவு பணமும் உங்களுக்கு வந்து சேரும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க, உத்தரவாதம் தரும் விதத்தில் இந்த ஆண்டு அமையப் போகிறது.

இராகு-கேது பெயர்ச்சியாலும், நல்ல முன்னேற்றங்களைக் காண்பீர்கள். ஆன்மீகப் பணிகளிலும், ஆலயத் திருப்பணிகளிலும் ஈடுபட்டு வி.ஐ.பி.களுக்கு மத்தியில் வி.வி.ஐ.பி.களாகும் வாய்ப்பு உருவாகும். ஏழரைச் சனி எண்ணற்ற இலாபத்தைக் கொடுக்கப் போகிறது.

இரண்டாம் சுற்று வருபவர்கள் என்றாலும், மூன்றாம் சுற்று நடப்பவர்கள் என்றாலும், சகாய ஸ்தானத்திற்கு அதிபதியாக சனி விளங்குவதால், தொட்ட காரியங்களில் வெற்றியை வழங்கும். மேட இராசியில் குருவின் பார்வையும், உங்கள் தனஸ்தானத்தில் தான் பதிவாகிறது. எனவே தொழில் முன்னேற்றம் கண்டு மகிழ்ச்சியடைவீர்கள்.

புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும், உங்கள் சுயஜாதகத்தில் உள்ள கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இரண்டும் இணைந்து செயற்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், பணிந்து வணங்கி பரிகாரங்களைச் செய்வதன் மூலம் பலன்பெறலாம். உங்கள் இராசிநாதன் செவ்வாய் ஆவார். அவர் 9 என்ற எண்ணின் ஆதிக்கத்திற்கு உரியவராவார்.

உங்கள் சுயஜாதகத்தில் செவ்வாய் இருக்கும் நிலையறிந்து, நவாம்சத்திலும் செவ்வாய் இருக்கும் இடமறிந்து, அதன் பாதசார பலமறிந்து, அதற்குரிய கிரக எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும்.

நீங்கள்தேசப்பற்றும், தெய்வப்பற்றும் மிக்கவர்கள். குத்துவிளக்கு ஏற்றுவது முதல், கொடுத்த கடனை வசூலிப்பது வரை உங்கள் பொறுப்பிலேயே மற்றவர்கள் ஒப்படைப்பர். செவ்வாயின் பலம் உங்களுக்கு இருப்பதால் எதை, எப்படிச் செய்தால் வெற்றிகரமாக அமையும் என்ற நுணுக்கத்தைக் கற்று வைத்திருப்பீர்கள். அன்பாலும், காரியம் சாதிப்பீர்கள், அதட்டியும் காரியம் சாதிப்பீர்கள். புகழ் ஒன்றே முக்கியதேவை, அதன் மூலம் பொருளை வரவழைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம், இளமையிலேயே உங்கள் மனதில் இடம்பிடிக்கும்.

உங்களுக்கு இந்தப் புத்தாண்டில் உலா வரும் கிரகநிலைகள் எப்படியெல்லாம் சந்தர்ப்பத்தையும், சாதகத்தையும் வழங்கப் போகின்றன என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**01.01.2011 முதல் 07.05.2011 வரை**

இக்காலத்தில் குருவின் பார்வை பலம் உங்கள் இராசியில் பதிகிறது. அதுமட்டுமல்லாமல் 9, 11 ஆகிய இடங்களிலும் பதிவதால் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

எதிர்காலத்திற்காகச் சேமித்த சேமிப்பு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுக்கல் வாங்கல்கள் திருப்தி தரும். தொழில் ரீதியாக வரும் வருமானம் கூடுதலாகவே கிடைக்கும். குறிப்பாக உங்கள் இராசியைக் குரு பார்ப்பதால், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

குருவின் பார்வை பலத்தால், வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். இந்த நேரத்தில் நண்பர்களும், உங்களுக்குக் கைகொடுத்து உதவ முன்வருவர். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்களோடு இணைந்து செயற்பட்டு உங்களின் கூட்டு முயற்சியை வெற்றிகரமாக்கிக் கொடுப்பார்கள். வாகன யோகத்தோடு, வளர்ச்சி ஏற்படும் நேரமிது. வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். இக்காலம் பொற்காலமாக குரு கவசம் பாடி குருவை வழிபடுவது நல்லது.

**08.05.2011 முதல் 31.12.2011 வரை**

இக்காலத்தில் குரு ஆறாமிடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். அதன் நேர்பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதியப்போவதால் கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். கொடுத்த கடன்கள் வசூலாகும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்ப்பீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். விவாகப் பேச்சுக்கள் முடிவடைவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

தொழில் ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். தொழில் வளர்ச்சி கருதி வங்கிகளில் கேட்ட கடனுதவி கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். நண்பர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு கைகொடுத்து உதவுவர்.

புதிய கூட்டாளிகளும் வந்திணைவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடியே உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் வந்துசேர்ந்து ஆச்சரியப்படுவீர்கள்.

வெளிநாட்டு அனுகூலம் கிடைக்கும் நேரமிது. உத்தியோக நலன் கருதி ஒரு சிலர் வெளிநாட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம். அந்த முயற்சியில் அனுகூலம் தர, மாற்று இனத்தவர்கள் கூட உங்களுக்கு ஒத்துழைப்புச் செய்யலாம். என்ன இருந்தாலும், ஆறாமிடத்தில் இருக்கும் குரு செயல் ஸ்தானத்தைப் பலப்படுத்துவதால், அதை நாம் கொண்டாடி மகிழ வேண்டும். எனவே, திசை மாறிய தென்முகக் கடவுளை தேர்ந்தெடுத்து நீங்கள் வழிபட்டால், அசையாச் சொத்துக்களும் உங்களுக்கு வந்துசேரும். ஆச்சரியப்படத்தக்க விதத்தில் வாழ்க்கையும் அமையும்.

மே 16ஆம் திகதியில் விருச்சிக இராசியில் இராகுவும், ரிஷப இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகறார்கள். ஜென்ம இராகு உங்களுக்கு செல்வாக்கையும், செல்வ நிலையையும் உயர்த்திக் கொடுக்கும். ஜென்ம இராகு என்பதால், உடல்நிலையில் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும்.

எனவே, உற்சாகத்தோடு செயற்படவும், உடல் ஆரோக்கியத்தோடு இருக்கவும் பாம்பு கிரகங்களை வழிபட்டு வருவது நல்லது. சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்தால், சந்தோஷங்கள் அதிகரிக்கும். ஏழில் கேது சஞ்சரிப்பதால் இல்லத்தில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். விரயங்களை சுபவிரயங்களாக ஆக்கிக் கொள்வது நல்லது.

குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே நீங்கள் ஆதாயத்தை அதிகம் வரவழைத்துக் கொள்ள இயலும். சப்தம கேது பயணங்களை அதிகரிக்க வைக்கும்.

காலையில் ஒரு ஊருக்கும், மாலையில் ஒரு ஊருக்கும், மதியத்தில் ஒரு ஊருக்கும் சென்று கொண்டே இருப்பீர்கள். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் உங்களுக்கு அதிகமாகவே கிடைக்கும். கேது ப்ரீதியாக, கற்பக விநாயகர் ஆலயத்திற்குச் சென்று ஆனைமுகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது. கேது ஸ்தலமான கேதுவை வழிபட்டு வருவது நல்லது.

புத்தாண்டில் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரவும், வியக்கும் செய்திகளை நண்பர்கள் கொண்டு வந்து சேர்க்கவும், வெள்ளிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும், சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்வதோடு, பௌர்ணமி கிரிவலம் வருவதன் மூலமும் பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

டிசம்பர் 21ஆம் திகதி துலாம் இராசியில் சனி உச்சம் பெறப்போகிறார். உங்களுக்கு 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி விளங்குவதால், இந்த சனிப்பெயர்ச்சி முன்னேற்றத்திற்கு வித்திடும் விதத்திலேயே அமையப் போகிறது.

குறிப்பாக, சகோதரர்கள் தக்க விதத்தில் உதவிக்கரம் நீட்டுவர். நிதிநிலை உயருவதற்கான வழியைத் தேர்ந்தெடுத்து நீங்கள் ஈடுபடும் புதுமுயற்சிகள் வெற்றி தரும்.

### சிவல்புரிசிங்காரம்

இட மாற்றம், ஊர்மாற்றம், வீடு மாற்றம், இலாகா மாற்றம் போன்றவைகள் ஒரு சிலருக்கு உருவாகலாம். பூர்வீக சொத்துக்களை விற்று, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும். ஆர்வத்தோடு செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்க, சனி கவசம் பாடி சனீஸ்வரரை வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)



உரும்பிராய் வடக்கு இலக்குமி சமூக அபிவிருத்தி சேமிப்புக் கழகத்தின் நிர்வாகசபைத் தெரிவும் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த(சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகளில் சித்தி எய்திய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மன்ற உபதலைவி திருமதி நவநீதன் ஜெகதீஸ் மங்கல விளக்கேற்றுவதையும் மன்றத் தலைவி ருக்மணி ஆனந்தவேல் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மற்றும் நிர்வாக உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

# புத்தாண்டில் பட்டாசு மற்றும் வீதி விபத்துக்களில் 228 பேர் காயம்

(கொழும்பு)

புதுவருடத் தினமான நேற்று முன்தினம் பட்டாசுகள் மற்றும் வீதிவிபத்துக்களால் 228 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்றனர் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு காயமுற்றவர்களில் 122 பேர் வைத்தியசாலைகளில் மேலதிக சிகிச்சைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட விபத்துக்களை விட இந்த வருடம் பட்டாசுகள் மூலம் ஏற்பட்ட விபத்துகள் குறைந்தளவிலேயே காணப்பட்டதெனவும் அவர் கூறினார்.

கடந்த 31 ஆம் திகதி நள்ளிரவு முதல் நேற்று முன்தினம் காலை 8 மணிவரை 94 விபத் துக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவையும் கடந்த காலத்தை விட குறைவானவையெனவும் கூறப்படுகிறது. (ஸ்ரீ-4)

# மற்றொரு பாராளு. உறுப்பினரால் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் விற்பனை

(கொழும்பு)

மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை விற்பனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை தரகர் ஒருவரின் மூலமாக இனந் தெரியாத நபருக்கு விற்பனை செய்துள்ளார்.

வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை கொள்வனவு செய்த நபர் அனுமதிக்கப்பட்ட என்ஜின் கொள்ளளவை விடவும் அதிகமான சொகுசு வாகனமொன்றை இறக்குமதி செய்துள்ளார்.

இதனால் குறித்த வாகனத்திற்காக பாராளுமன்ற உறுப்பினர் ஒரு இலட்சம் ரூபா வரியைச் செலுத்த நேரிட்டுள்ளது. ஆயிரத்து 800 சீசீ ரகத்திற்கும் அதிகமான கொள்ளளவைக்கொண்ட என்ஜின்களை உடைய சொகுசு வாகனங்களை கொள்வனவு செய்தால் அதற்கான வரியினை பராளுமன்ற உறுப்பினர் செலுத்த வேண்டும் என்பது வழமையான நியதியாகும்.

அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட அநேகமான பாராளுமன்ற உறுப்பினர் 15 இலட்ச ரூபா வரையில் தமது அனுமதிப் பத்திரத்தை விற்பனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீர்வையற்ற வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரையில் கடனுதவி வழங்கப்படுவதாகவும் இந்தக் கடனுக்காக மாதாந்தம் 69 ஆயிரத்து 445 ரூபாவினை பாராளுமன்ற உறுப்பினர்கள் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# புதிய விசா முறைமையினால் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு

புதிய விசா முறைமையினால் சுற்றுலாத் துறைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் இணையத்தினூடாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் விசா விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் விசா கோரி விண்ணப்பிக்கும் நபர்களிடமிருந்து கட்டணம் அறவீடு செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் இந்தத் திட்டம் சுற்றுலாத்துறையைப் பாதிக்கக்கூடும் எனவும் முன்னணி ஹோட்டல் உரிமையாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

சுற்றுலா விசா கோரி விண்ணப்பிக்கும் வெளிநாட்டு பிரஜைகளிடமிருந்து தற்போது கட்டணம் அறவீடு செய்யப்படுவதில்லை.

எனினும் எதிர்வரும் காலங்களில் விசா கட்டணமொன்றை அறவீடு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா, ஜெர்மனி, இந்தியா உள்ளிட்ட 78 முக்கிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கட்டணம் அறவீடு செய்யப்படவுள்ளது.

சிங்கப்பூர் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைத் தவிர்ந்த ஏனைய அனைத்து நாடுகளினதும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து விசா கட்டணம் அறவீடு செய்யப்படவுள்ளது.

சுற்றுலாக் கைத்தொழில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வரும் தருணத்தில் இவ்வாறு கெடுபிடிகளை விதித்தால் அது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் எனும் ஹோட்டல் உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இணையத்தின் ஊடாக விசா விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அனுமதி வழங்கும் முறைமையினால் பல்வேறு நன்மைகள் காணப்படுவதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறுகிய காலத்தில் சுலபமான முறையில் விசா விண்ணப்பங்களை பரிசீலனை செய்து, விசாக்களை வழங்கமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கறுப்புப் பட்டியல் இடப்பட்ட மற்றும் நாட்டுக்குள் பிரவேசிப்பதனை அனுமதிக்க முடியாத நபர்களை இலகுவில் இனம் காணமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. விசா வழங்கும் நடவடிக்கைகளுக்கு புலனாய்வுப் பிரிவினரும் ஒத்துழைப்பு வழங்க உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஆள் கடத்தலில் ஈடுபட்ட மலேசியர் ஒருவர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக சட்ட விரோதமான முறையில் நபர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வந்த மலேசியர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இவர் நீர்கொழும்பு நீதிமன்ற நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அதனடிப்படையில் அவரை விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஆங்சான் சூகியை விட மோசமாக நடத்தப்படுகிறார் பொன்சேகா

## ஐ.தே.க. பிரதித் தலைவர் குற்றச்சாட்டு

மியன்மாரின் எதிர்க்கட்சி தலைவி ஆங்சான் சூகீயை விடவும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா மோசமாக நடத்தப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களை விடவும் அரசாங்கம் சரத்பொன்சேகாவை மோசமாக நடத்திவருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிப் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் சரத்பொன்சேகா போராடி வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மார் ஆட்சியாளர்கள் ஆங்சான் சூகியை வீட்டுக்காவலில் தடுத்து வைத்ததாகவும் இலங்கை அரசாங்கம், சரத்பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மக்கள் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வரும் சந்தர்ப்பத்தில், சரத் பொன்சேகா சிறையில் வாடிவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு உரிய மருத்துவ வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புத்தாண்டிலேனும் சரத்பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில், சரத் பொன்சேகா கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


## அறிவித்தல்

### மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 10
சென்பீற்றர்ஸ் வீதி
ஆதன இல. 126

வட்டாரம் 10 சென்பீற்றர்ஸ் வீதி ஆதன இல. 126 இல் அமைந்துள்ள ஆதனமானது பூதத்தம்பி விஜயகுமாரும் பெண் மேரிஸ்ரெலாவும் என்பவர்களால் அறுதியாக விற்கப்பட்டு செபஸ்ரியாம்பிள்ளை அலெக்சும் பெண் ஜீவரஞ்சித்தும் என்பவர்களால் 6253 A - 06.09.2003 ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என்பதை தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காகப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாட்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து செபஸ்ரியாம்பிள்ளை அலெக்சும் பெண் ஜீவரஞ்சித்தும் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(3327)


# உர விநியோகம்

(உடுப்பிட்டி)

நெற்பயிற் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்காக இறுதி உர விநியோகம் புலோலி கமநல திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இது வரை உரத்தினைப் பெறாத விவசாயிகள் நாளை மறுதினம் புதன் கிழமைக்கு முன்னர் தமக்குரிய உரத்தினைப் பெற்றுக் கொள்ளும்படி புலோலி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4-52)


## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின்
528 பிரிவின் கீழான விண்ணப்பம்.
இல.7/1, ஈச்சமோட்டைறோட்,
யாழ்ப்பாணம் என்னும் இடத்தைசேர்ந்த டோமினிக் அல்பிரட்மரியதாஸ் குணசிங்கம் என்பவரின் மரணச்சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்.

மரணமடைந்தவர்.

ரைசன்பிராங் குணசிங்கம் Tyson Frank Gunasingham கனடா
தனது தத்துவகாரன் 89, கோவில் வீதி, யாழ்ப்பாணம். நீக்கிலாப்பிள்ளைவின் செஸ்செலாஸ் தங்கராஜா மூலம் தோற்றம்.

-மனுதார்-

எதிர்

வழ.இல:த/05/10

1.டோமினிக் அல்பிரட் மரியதாஸ் குணசிங்கம் கைம்பெண் மேரி யோசேப்பின் றெனி
2.ராஜேந்திரம் ஜோய் கிறேஸ்
3. வில்லிறைற் குணசிங்கம் Billy Wright Gunasingham அனைவரும் ஈச்சமோட்டை றோட் தற்போது முறையே டென்மார்க்,நோர்வே.

-எதிர்மனுதார்கள்-

இவ்வழக்கு மேற்குறித்த மனுதாரினால் மேற்குறித்த மரணமடைந்தாரின், மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் ஆட்சேபனை இருப்பின் இந்நீதிமன்றில் 2011 ஆம் ஆண்டு தை மாதம் 21ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சமுகமளித்து தெரிவிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்கள்.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்.


வரைவு
மனுதார் சட்டத்தரணி

(3328)

# ஆசிய நாடுகளுடனான உறவை வலுப்படுத்துகிறது அமெரிக்கா

## சீனாவை தனியாக ஒதுக்கும் வாய்ப்புக்கள் அதிகம்

**ஆசியப் பிராந்தியத்தில் பிற நாடுகளுடன் இருக்கும் தன் உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், புதிதாக சில நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்துவதன் மூலமும் ஆசியாவில் கால் பதிக்கும் திட்டங்களை அமெரிக்கா விரிவுபடுத்தி வருவதாக பிரபல ஆய்வாளரான பிரக்மா செலானி தனது செய்திக் கட்டுரையில் தெரிவித்துள்ளவை வருமாறு,**



பராக் ஒபாமா

உலகத்தின் தற்போதைய அரசியல் நிலைவரங்களின் படி ஆசியாவில் கால் பதிப்பதற்கான காய் நகர்த்தல்களை அமெரிக்கா மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய அளவில் சில மாற்றங்களை ஏற்படுத்தும் முக்கியமான பகுதியாக வேகமாக வளர்ந்து வரும் நாடுகளை உடையதாக ஆசியா மாறியுள்ளது. ஆசியக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்களும், சவால்களும் சர்வதேச பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு சூழல்களைப் பாதிக்கும் காரணிகள் என்பதால் உலக நாடுகள் பலவற்றால் ஆசிய மாற்றங்கள் உற்றுக் கவனிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு சீனாவின் ஆருடத்தில் புலி ஆண்டாக வர்ணிக்கப்படும் இந்த ஆண்டை சீனா மட்டுமல்ல அருகில் உள்ள பிற ஆசிய நாடுகளும் அத்தனை எளிதில் மறந்துவிட முடியாது. சீனா தன் நாட்டு எல்லையை விரிவாக்குவதற்காக எடுத்து வரும் சில முயற்சிகளும் அதற்காக தீவிரவாதச் செயல்கள் பரப்புவதற்கு ஊக்கமளிக்கும் விதத்தில் செயற்படுவதும் அண்டை நாடுகளான இந்தியா, ஜப்பான் ஆகியவற்றிற்கு மன உளைச்சலை அதிகரித்துள்ளது.

தங்கள் நாட்டின் வளர்ச்சியின் மீது காட்டப்பட்டு வரும் அக்கறையைக் கூடக் குறைத்துக் கொண்டு நாட்டின் எல்லையை விரிவாக்குவதிலே இந்த வருடம் சீனா மிகுந்த முனைப்புக்காட்டி வந்தது.

அமெரிக்கா மற்றும் ஆசிய நாடுகளுடனான தொடர்புகளை விரிவுபடுத்த சீனாவின் இந்தச் செயல்கள் பேருதவியாக அமைந்துவிட்டன.

நாட்டின் எல்லையை விரிவுபடுத்த முனைந்து வரும் சீனாவின் இதுபோன்ற செயல்களால் ஆசிய நாடுகள் பலவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. கூட்டாக இணைந்து செயற்படுவதன் மூலமே சீனாவின் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்பதையும் பிறநாடுகள் உணரத் தொடங்கிவிட்டன. இந்தக் கூட்டுறவால் சீனாவும் தான் நடந்து கொள்ளும் விதத்தை சிறிது மாற்ற வேண்டிய அவசிய சூழல் உண்டாகியுள்ளது.

இருப்பினும் இரு நாடுகளுக்கும் இடையேயான கூட்டு முயற்சிகளையும், ஒப்பந்தங்களையும் உண்டாக்குவது என்பது அவசர கதியில் செய்யக் கூடிய காரியமல்ல.



வென்ஜியாபோ

மெதுவாக நடக்கக் கூடிய வழிமுறைகளே.ஏனெனில் நாடுகளுக்கு இடையே உடன்பாடுகள் உருவாகும்போது சில விடயங்களில் இருநாடுகளுமே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய சூழல் ஏற்படும்.

இதற்கு உதாரணமாக சமீப காலங்களாகவே இந்தியாவுடனான உடன்பாடுகளுக்காக அமெரிக்கா மிதமான போக்கைக் கடைப்பிடித்து வருவதோடு பல விடயங்களில் இரு நாடுக்கும் இணைந்து ஒத்துழைக்கத் தேவையான முனைப்புக்களையும் தீவிரமாக எடுத்து வருகிறது.இந்தியாவுடனான நட்பைப் பேணிப் பாதுகாத்து வரும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சமீபத்தில் இந்தியா சென்றிருந்தபோது ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் செயற்பாடுகளுக்கு இந்தியாவின் நட்பு மிகவும் இன்றிமையாதது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அமெரிக்காவின் பார்வை வியட்நாம் மீதும் திரும்பியுள்ளது. இருநாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவுடன் அணுசக்தி ஒப்பந்தங்களை ஏற்படுத்தியதைப் போன்று, வியட்நாமுடனும் அணு ஆயுத உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் ஹனோய்க்கும் வோஷிங்டனிற்குமான பனிப்போர் நீடித்தே வருகிறது.

வியட்நாமில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நிலவுவதால் அமெரிக்காவுடனான உறவு குறித்து அந்நாட்டில் பல பிரிவினைகளும், மாற்றுக் கருத்துக்களும் இருந்தே வருகின்றன. சீனாவின் திடமான வியூகங்களை எதிர்த்து அமெரிக்காவுடன் நெருக்கமாக நட்பு நாடாக வியட்நாம் தொடர்ந்து காய்நகர்த்தி வரும் சூழ்நிலையிலும், வியட்நாமின் பல முக்கிய தலைவர்களுக்கு இதில் உடன்பாடில்லை என்பது நன்றாகவே தெரிகிறது.

அமெரிக்காவுடன் நெருங்கிய நாடாகும் பட்சத்தில் நாட்டின் ஆட்சி மாற்றத்திலேயே அமெரிக்கர்கள் குறியாக இருப்பர் என்ற அச்சம் பல தலைவர்களிடத்தில் உள்ளது. சீனா தன் தரப்பில் மிகுந்த கவனத்துடனே செயற்பட்டு வருகிறது. அண்டை நாடுகளான இந்தியா, ஜப்பானுடன் "முக்கோண உறவையே கடைபிடித்து வருகிறது. டோக்கியோவுடனான உறவு பாதிக்கப்படும் கால கட்டங்களில் எல்லாம் புதுடில்லியுடன் உறவைப் புதுப்பித்து நெருக்கமான நாடாகும் உத்திகளை கடந்த பல ஆண்டுகளாகவே சீனா கையாண்டு வருகிறது.

ஆசியாவில் முக்கிய எதிரி நாடுகளாக சீனா கருதும் இந்தியா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளுடனுமே தன் வசதிக்கு தகுந்தவாறு மாற்றி மாற்றி நல்லுறவைப் பேணும் வியூகத்தையே சீனா பின்பற்றி வருகிறது.

ஆசிய நாடுகளுடன் நட்புறவை விரும்பும் அமெரிக்காவைப் பொறுத்த வரையில், இந்தியா-ஜப்பான் ஆகிய இரண்டுமே மிக முக்கியமான நாடுகள். சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் இன்றியமையாதவை என அமெரிக்கா கருதினாலும் சீனாவுடன்



மன்மோகன் சிங்

தனித்த உடன்பாடுகளை மேற்கொள்வதை விட இந்தியா, ஜப்பான் ஆகிய இரண்டு நாடுகளுடனும் நட்புறவையே அமெரிக்கா விரும்புகிறது. இன்றைக்கு ஆசியப் பிராந்தியத்திலேயே இந்தியா-ஜப்பான் ஆகிய இரண்டு நாடுகளின் கூட்டுறவே அதி வேகமான ஒன்றாக உள்ளது.

அமெரிக்காவுடனான சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் உறவுகளை ஒரு நாற்கரமாக எடுத்துக் கொண்டாலும் இந்தியாவும் ஜப்பானும் கூட்டாக இணைந்தே செயற்படும். அதேபோல் இந்த வரிசையில் ரஷ்யாவையும் சேர்த்து இவற்றை ஐங்கோணமாக சித்திரிக்கும் பட்சத்தில் சீனா மட்டும் தனியே ஒதுக்கப்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. மற்ற நான்கு நாடுகளுமே ஒன்றுக்கொன்று ஒற்றுமையாக செயற்பட்டு உதவக்கூடிய நாடுகள்.

அதனால் சீனாவைப் மையப் படுத்தி ஆசிய நாடுகளுடனான உறவு இல்லை என்பது தெளிவாகி விட்டது. இது சீனாவிற்கு அச்சம் விளைவிக்கக் கூடிய ஒன்றே.

சமீபத்திய நிலைவரங்களின் படி பார்த்தால் ரஷ்யா-ஜப்பான் கூட்டுறவு உடனடியாக சாத்தியமாகாத ஒன்று. அதேபோன்று அமெரிக்கா-சீனா உறவும் சிறந்த ஒன்றாக இல்லை. சீனாவின் இந்த நிலையை சாதகமாகக் கொண்டு ஏற்கனவே ஆசியப் பிராந்தியத்தில் பிற நாடுகளுடன் இருக்கும் தன் உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் புதிதாக சில நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்துவதன் மூலமும் ஆசியாவில் கால் தடம் பதிக்கும் திட்டங்களை அமெரிக்கா விரிவுபடுத்தி வருகிறது" என ஆய்வாளர் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இரண்டும் இரண்டும் நான்குதான்; அதையும் கூட ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துச் சொல்லுங்கள் - விட்டன்பர்க்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஐ.நா நிபுணர் குழு தமது நீதிமன்றை இங்கு நடத்த அனுமதிக்க முடியாது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் பெரேரா



(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழு இங்கு வந்து சாட்சிகளை விசாரித்து தமது சொந்த நீதிமன்றத்தை இந்த நாட்டில் நடத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெ்ரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுவாக நாட்டிற்கு எந்தவொரு சிறப்புக் குழு வருவதானாலும் அது பற்றிய தகவல்கள் முன்கூட்டியே அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் நிகழ்ச்சி நிரல் என்ன என்பது தெரியப்படுத்தப்படல் வேண்டும். அதைச்செய்யாமல் எந்தவொரு ஆணைக்குழுவோ அல்லது குழுவோ தமது எண்ணப்படி செயற்பட முடியாது. அவர்கள் தமது எல்லைகளைத் தாண்டி கால்வைக்க முடியாது.

அவர்கள் இங்கு வந்து நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கலாம். ஐ.நா. நிபுணர் குழுவில் உள்ள எந்தவொரு நபராயினும் வடக்கு, கிழக்குப் பகுதிக்குச் செல்ல விரும்பினால் அதற்கு அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும். ஏன் அவர்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்பது பற்றி அரசாங்கத்திற்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கில் பல பகுதிகளில் இன்னமும்கூட படையினர் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அந்தப் பகுதிக்குச் செல்வது உயிருக்கு ஆபத்தானது எனக் கருதினால் அங்கு செல்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்காது. அவர்களை நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க மட்டுமே அனுமதிக்க முடியும்.

ஆனால் அவர்கள் சாட்சிகளை விசாரித்து தமது சொந்த நீதிமன்றத்தை இந்த நாட்டில் நடத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# பறவைகளே எங்கிருந்து வருகிறீர்கள்? முன்பும் நீங்கள் வந்ததாக ஞாபகம்

கனவு பற்றி அதிகமாக ஆய்வு செய்தவர் 'சிக்மண்ட் பிராய்ட்' என்ற உளவியலாளர். கனவு பற்றி அவர் முன்வைத்த கருத்துக்கள் முதன்மை பெற்றுள்ள போதிலும் கனவு குறித்த பல கதைகள் ஏற்கெனவே நம்மிடம் உண்டு.

திரிசடை கண்ட கனவு சீதையின் விடயத்தில் சரியாகிப் போனது. எனவே கனவுகள் அத்தனையும் நனவிலி மனத்தின் வெளிப்பாடு என்று கூறுவதற்கு அப்பால் எதிர்கால நிகழ்வுகளும் கனவுகளாகக் காட்சி தரும் என்பதை அடியோடு மறுத்துவிட முடியாது.

அந்த வகையில் நேற்று இரவு ஆழ்ந்த நித்திரையில் ஒரு கனவு கண்டேன். அது வித்தியாசமான கனவு.

மிகப்பெரியதொரு பறவைக் கூட்டம் போட்டி போட்டு பறந்து வருகிறது. பறவைகளில் கறுப்புப் பறவைகள் ஏராளம். பறக்க முடியாத பறவைகளும் தாராளம். குஞ்சுப் பறவைகள் முதல் முதிய பறவைகள் வரை தமது சிறகுகளை விரித்து அடித்துப் பறந்து வரும் வேகத்தைக் கண்ட போது, ஏதோ வைத்த பொருளை எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவை பறந்து வருவதாக உணர முடிந்தது.

வழமையாகப் பறவைகளுக்கு இரண்டு கால்கள் மட்டுமே. ஆனால் நம் கனவில் தோன்றிய பறவைகளுக்கு இரண்டு கைகளும் இருந்தன.

கூட்டம் கூட்டமாக வருகின்ற பறவைகளை உற்றுப் பார்த்தேன். ஒவ்வொன்றும் வித்தியாசமாக இருந்தாலும் அந்தப் பறவைக் கூட்டத்திற்கு ஒரு தலைமைப் பறவை இருப்பதை என்னால் உணர முடிந்தது.

இருந்தும் ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தைக் கொத்துவதிலும், திட்டுவதிலும் கடுமையாக ஈடுபட்டிருந்தன. தமிழ் மொழியிலேயே அந்தப் பறவைகள் திட்டித் தீர்ப்பதால் அவை தமிழ்ப் பறவைகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற எனது முடிபில் தவறில்லை.

வானத்தில் பறந்து வந்த பறவைகள் திடீரெனத் தரையில் இறங்கிக் கொண்டன. இறங்கும் போதே கூப்பிய கரத்துடன் அவை இறங்கியதைக் கண்டேன். ஆ! எவ்வளவு பண்புடைமை. என் ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. தரையிறங்கிய பறவைகளில் சில அவசர அவசரமாக மேடை போட்டன; கதிரை அடுக்கின. அந்தக் கதிரைகளில் சிலர் வந்து அமர்ந்து கொண்டனர். ஒலிவாங்கிகள் பொருத்தப்பட, அவற்றுக்கு முன் வந்து நின்ற பறவைகள் ஆக்ரோஷமாகப் பேசின. மேடையிலும் சில பறவைகள் குந்தியிருந்தன. பேச்சுக்களின் இடையிடையே கைதட்டல்.

சில பறவைகளோ காகிதாதிகளை மதிற் சுவர்களில் ஒட்டிக் கொண்டன. இன்னும் சில பறவைகள் அறிக்கை எழுதின. சில பறவைகள் வீடு வீடாகச் சென்று அங்கிருப்பவர்களை வணங்கி மந்திரமோதின. என்னதான் நடக்கிறது? ஒரே 'குழப்பம். திடீரென சில பறவைகள் சத்தமிட்டவாறு சண்டையிட்டன. பறவைகளின் சண்டையால் பயந்த நான் கத்திக் கொண்டே, கட்டிலால் விழுந்தேன். அட! கண்ட கனவே கட்டிலால் விழுத்தியதெனில், இதற்குள் ஏதோ அர்த்தம் உண்டெனக் கருதி விடிபொழுதில் சென்று எனக்குத் தெரிந்த ஒரு சோதிடரிடம் கனவைத் தெரிவித்து, இதன் பொருள் யாதோ என்று கேட்டேன்.

அதற்கு அவர் விரைவில் தேர்தல் வரப்போவதையும் அதில் வேட்பாளர்கள் பலர் குதிக்கப் போவதையுமே கனவு குறிப்பதாகத் தெரிவித்தார். அவர் இவ்வாறு கூறியபோது தான் அந்தப் பறவைகளை முன்பும் ஒரு தடவை கண்ட ஞாபகம் எனக்கு வந்தது.

# எரிபொருள் கூட்டுத்தாபனத்துடன் மின்சார சபை உடன்படிக்கை

(கொழும்பு)

எதிர்காலத்தில் கனியவளக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யவுள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

இந்த வருடத்தினுள் கனியவளக் கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளதாக மின்சார சபைத் தலைவர் வித்யா அமரபால தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான திட்டமிடல் நடவடிக்கைகள் தற்சமயம் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த வருடம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்திற்காக பெறப்பட்ட கடனடிப்படையிலான எரிபொருளுக்கான நிதி செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாடு இருதரப்பினருக்கும் அனுகூலமாக அமைந்ததாக அவர் குறிப்பிட்டார்.

புதிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் எரிபொருள் முகாமைத்துவம் இடம்பெறும் எனவும் மின்சார சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## யாழ்.கல்வி வலயத்தின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை ஆசிரியர்கள் ஆகியோரை இன்று காலை 8.30 மணிக்குக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ந-5)

# உள்ளூராட்சி தேர்தலுக்காக 180 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகளின் பொருட்டு 180 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக நாடளாவிய ரீதியாக இடம்பெறும் தேர்தல் ஒன்றுக்கு இவ்வாறான நிதி ஒதுக்கப்படும் என தேர்தல் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதிக்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இறுதியாக 2006 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

4 வருடங்களுக்கொருமுறை உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலையில் இந்த வருடம் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் நிர்வாக காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

இதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் அந்த காலவரையறை நிறைவடைகிறது. எதிர்வரும் உள்ளூராட்சி தேர் தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரம் வெளியிடப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிச் செயலமர்வு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 178 முன்பள்ளிகளில் கடமையாற்றும் 280 இற்குமேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 5 நாள் பயிற்சி செயலமர்வு கடந்த டிசம்பர் 20ஆம் திகதி ஆரம்பமாகி இன்று திங்கட்கிழமை முடிவடைகிறது.

போரூட் நிறுவன நிதி ஒதுக்கீட்டுடன் கிளிநொச்சி வலய கல்வித் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தலுடன் இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கிளி. கனகபுரம் கிராம முன்னேற்றச் சங்கம், கிளி. புனித திரேசா பெண்கள் கல்லூரி, பூநகரி ம.வி. ஆகிய நான்கு நிலையங்களில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

பயிற்சி பெற்ற இவ் ஆசிரியர்கள் மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட உள்ளார்கள் என கிளிநொச்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.செல்வராஜா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-84)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



இளையோர்களே! உங்களை என்றும் கொடுப்போன் நிலையில் இருந்தவர்களாக! பிறர்க்கு என்றும் உதவுங்கள்! உலகிற்குத் தொண்டாற்றுங்கள்! உங்களிடம் இருப்பது அற்பமே ஆயினும் அதையும் வழங்கி விடுங்கள்! அங்ஙனம் வழங்குகையில் நிபந்தனைகள் இடவேண்டாம். இறைவன் நமக்கு வழங்கியிருப்பதைப் போன்று நாமும் எந்தவிதமான கைம்மாறும் கருதாமல் வழங்குவோம்.

கடலை மட்டுமே பாருங்கள். அலைகளைப் பார்க்க வேண்டாம். இறைவனின் அருளுக்குப் பாத்திரமாவோம். அவன் மக்களாக நாம் விளங்குவோம். இவ்விரண்டும் அவனைச் சேர்தற்குரிய வழிகள். இறைவனின் குழந்தைகளான அருளாளர்களின் கூட்டுறவு, நட்புறவு கிடைப்பது அரிதினும் அரிது. அவர்களுடைய ஐந்து நிமிடக் கூட்டுறவு நமது வாழ்க்கையையே மாற்றி விடும் ஆற்றல் வாய்ந்தது. சான்றோர்களின் நட்புறவை நீங்கள் மனமார விரும்பினால் சான்றோர் ஒருவர் தாமாகவே உங்களைத்தேடி வருவார்.

# ஐவரிக்கோஸ்ட் ஜனாதிபதி பதவிவிலக மறுப்பு; தாக்குதல் நடத்த ஆபிரிக்க நாடுகள் முடிவு

நான் பதவி விலகமாட்டேன். என்னைப் பதவியிலிருந்து தூக்க சர்வதேச சமூக தலைவர்கள் நாட்டின் ஒரு தரப்பின ரைத் தூண்டி விடுகின்றனர் என ஐவரிக் கோஸ்ட் ஜனாதிபதி லாரன் பேக்போ குற்றம் சாட்டியுள்ளார். அவர் பதவி விலகாவிட்டால் ஐவரிகோஸ்ட்டுக்கு இராணுவத்தை அனுப்ப, மேற்கு ஆபிரிக்க நாடுகளின் இராணுவக்குழு முடிவு செய்துள்ளது.

ஆபிரிக்காவின் மேற்குப்பகுதியில் உள்ள ஐவரிக்கோஸ்ட்டில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி ஐ.நா கண்காணிப்பில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் எதிர்கட்சி தலைவர் அலசான் வட்டார வெற்றிபெற்ற தாக ஐ.நா. அறிவித்தது.

அதை ஏற்க மறுத்த ஜனாதிபதி லாரன் பேக்போ பதவிவிலக மறுத்தார். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளும் மேற்கு ஆபிரிக்க யூனியனும் வலியுறுத்திய பின்னரும் அவர் பிடிவாதமாகவுள்ளார். ஐவரிக்கோஸ்ட்டின் புதிய ஜனாதிபதியாக வட்டாராவை நியமித்தது ஐக்கிய நாடுகள் சபை. பேக்போ பதவிவிலகுவது குறித்து பெனின், சியரா லியோன் மற்றும் கேப் வெர்டே ஆகிய நாடுகளின் தலைவர்கள் பேச்சு வார்த்தையில் இறங்கினர். அதில் முடிவு ஒன்றும் எட்ப்படாததால் பேக்போவுக்கு இன்று வரை இறுதி அவகாசம் அளிக்கப்பட்டது.

இதற்கிடையில் பேக்போவின் அமைச் சரவையில் இளைஞர் துறை அமைச்சராக உள்ள சார்லஸ் ப்லே கவுட் -ஜனவரி முதலாம் திகதிக்குள் ஐ.நா. படைகள் மற்றும் வட்டாரா ஆகியோர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். இல்லையெனில் எங்கள் ஆதர வாளர்கள் வட்டாரா தங்கியுள்ள விடுதியை முற்றுகையிட்டு என்ன செய்ய வேண்டுமோ அதை செய்வர் என்று மிரட்டல் விடுத்தார். இதற்கு கண்டனம் தெரிவித்த ஐ.நா.-பேக்போ ஆதரவாளர்கள் இதுபோன்ற வன்முறையில் ஈடுபட்டால் மீண்டும் உள்நாட்டுக் கலவரம் வெடிக்கும் என்று எச்சரித்தது. பிரதமர் கில்லம் சொரோ கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் , டிசம்பர் 31ஆம் திகதி இரவோடு பேக்போ தனது பதவியை விட்டு விலக வேண்டும். அதுதான் அவருக்கு நல்லது. நாட்டில் எந்த நேரமும் உள்நாட்டு போர் மூளலாம் என்று எச்சரித்திருந்தார். ஆனால் நேற்று முன்தினம் புத்தாண்டுக்கு வாழ்த்துச் செய்தி வெளியிட்ட ஜனாதிபதி பேக்போ, தேர்தலில் நான்வெற்றி பெற்றேன். விடுதியில் தங்கியுள்ள வட்டாரா தனது வீட்டிற்குச் செல்லலாம் என்று கூறியுள்ளார்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார அமைப்பின் (எக்கோவாஸ்) இராணுவத் தலைவர்களின் கூட்டம், நைஜீரியத் தலைநகர் அபுஜாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பெனின், புர்க்கினா, பாசோ, மாலி, கானா, லைபீரியா, செனகல், டோகோ, நைஜர் மற்றும் நைஜீரியா நாடுகளின் இராணுவத் தலைவர்கள் கலந்து கொண்டனர். பேக்போ பதவி விலகாவிட்டால் எதிர் வரும் 17,18 ஆம் திகதிகளில் மாலிநாட்டில் நடக்கும் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும் என இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. எனினும் ஐவரி கோஸ்டின் மீது எந்நேரமும் தாக்குதல் நடத்த தயார் நிலையில் எக்கோவாசின் 6ஆயிரத்து 500 வீரர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

# முதல் மனிதன் தோன்றியது எங்கே? வரலாற்றை திருத்தும் புதிய முடிவு

உலகின் முதல் மனிதன் மேற்கு ஆசியாவில் தான் தோன்றினான் என இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இது நாள் வரையில் கடந்த இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஹோமோ சேப்பியன் என்ற இனத்தில் இருந்து தான் நவீன மனிதன் தோன்றினான் என்றும் முதன் முதலில் ஆபிரிக்காவில் தோன்றிய இந்த ஹோமோ சேப்பியன் இனத்தவர் படிப்படியாக ஐரோப்பா, மேற்கு ஆசியா மற்றும் இதர ஆசியப் பகுதிகள் நோக்கி இடம்பெயர்ந்தனர் எனவும் வரலாற்று அறிஞர்களால் நம்பப் பட்டு வந்தது.

சமீபத்தில் இஸ்ரேல் நாட்டில் உள்ள பென்-குரியான் விமான நிலையம் அருகில் இருக்கும் குகை ஒன்றில் (குசேம்), அந்நாட்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது நான்கு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆதி மனிதனின் உடல் படிவங்களை கண்டெடுத்துள்ளனர்.

இது குறித்து டெல் அவிவ் பல்கலை விஞ்ஞானிகள் கூறியதாவது,

நான்கு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஹோமோ சேப்பியன்களின் உடல் படிவங்கள் குசேம் குகையில் கிடைத்துள்ளன. மனித பல் போன்றுள்ள இந்த படிமம் மத்திய பிளைஸ்தோகின் காலத்தை சேர்ந்தது.

இதை ஆய்வு செய்ததில் உலகின் முதல் மனிதன் மேற்கு ஆசியாவில் தான் தோன்றினான் என தெரிய வந்துள்ளது. மேலும் மேற்கு ஆசியாவில் இருந்து தான் உலகின் பிற பகுதிகளுக்கும் பரவியுள்ளான் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஆபிரிக்காவில் தான் முதல் ஹோமோ சேப்பியன் தோன்றினான் எனவும் உலகின் தாய்வீடு ஆபிரிக்கா எனவும் கூறப்பட்டு வந்த நிலையில் இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகளின் புதிய முடிவுகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இதன்மூலம் நவீன கால மனிதனின் தோற்றம் குறித்த வரலாறு திருத்தி எழுதப்படும் எனத் தெரிகிறது. (ஸ்ரீ-2)

# மரபணு மாற்றத்தால் 'பாடும்' எலி ஜப்பான் விஞ்ஞானிகள் சாதனை

(டோக்கியோ)

மரபணு மாற்றம் மூலம் பறவைகள் போன்று குரல் எழுப்பும் எலியை ஜப்பான் விஞ்ஞானிகள் உருவாக்கி சாதனை புரிந்துள்ளனர். இதன் மூலம் மனிதனுக்கு பேச்சாற்றல் வந்த இரகசியம் குறித்து அறிந்து கொள்ள முடியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பரிணாம வளர்ச்சிக்கு மியூட்டேசன் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மரபணுவில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் முக்கிய காரணியாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் பரிணாம வளர்ச்சியின் இரகசியங்களை அறிந்து கொள்ளும் வகையில் ஜப்பானை சேர்ந்த ஒசாக பல்கலைக் கழக விஞ்ஞானிகள் தீவிர ஆய்வில் களமிறங்கினர்.

எலிகளின் மரபணுக்களில் மாற்றம் செய்து ஆய்வு நடத்தினர். இதில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட எலிகளில் ஒன்று பறவைகள் போன்று குரல் எழுப்பியது தெரிந்தது.

இதையடுத்து ஆய்வை விஞ்ஞானிகள் தீவிரப்படுத்தயுள்ளனர். இது குறித்து ஆய்வுக் குழுவைச் சேர்ந்த விஞ்ஞானி அரிக்குனி உச்சிமுரா கூறியதாவது,

பரிணாம வளர்ச்சிக்கு திடீர் மாற்றங்களே முக்கிய காரணி என்பது ஏற்கனவே கண்டறியப்பட்ட வரலாற்று ஆய்வு உண்மை. இதை அடிப்படையாகக் கொண்டு எலிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத் திட்டத்திற்கு எலிகள் பரிணாம "வளர்ச்சித் திட்டம் என்று பெயரிடப்பட்டது. எலிகளின் மரபணுக்களில் (டி.என்.ஏ) சில மாற்றங்களை செய்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது.

அப்போது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட எலிகளில் ஒன்று பறவைகள் போன்று குரல் எழுப்பியது. இது எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மேலும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட எலி, அதன் அடுத்த தலைமுறைக்கும் தொடர்ந்து பாடும் குணாதிசயத்தை மரபணு மூலம் கடத்தும் என்பதும் ஆய்வில் உறுதியாகியுள்ளது.

எனவே அந்த எலியின் மரபணு தன்மையை அடிப்படையாகக் கொண்டு மேலும் 100 பாடும் எலிகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மனிதர்களுக்கு பேச்சாற்றல் வந்ததன் இரகசியத்தை அறிந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பறவைகளின் பாடும் குணாதிசயங்களையும் கூர்ந்து கவனித்து ஆய்வு நடத்துகிறது என அரிக்குனி உச்சிமுரா தெரிவித்தார். (ஸ்ரீ-2)





Join Us as an Insurance Adviser to experience what you hoped for....

உங்கள் நம்பிக்கைக்குரிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள காப்புறுதி ஆலோசகராக எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்.

யூனியன் அஷ்யூரன்ஸ் என்பது இலங்கையின் மாபெரும் கூட்டு நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி யின் வலிமையையும் உறுதிப்பாட்டையும் பக்கபலமாகக் கொண்ட ஒரு முன்னணி நிறுவனமாகும். 20 ஆண்டுகளுக்கும் மேலாக நம்பிக்கையின் சின்னமாக விளங்கும் நாம், எமது நேர்மை, தொழில் நிபுணத்துவம் என்பவற்றால் வாடிக்கையாளர்களினதும் ஊழியர்களினதும் இதயங்களில் இடம்பிடித்துள்ளோம். எமது தரமுயர்ந்த வெளிப்படையான சேவைகள் உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் பல்வேறு விருதுகளை எமக்கு பெற்றுத்தந்துள்ளது. நாம் இன்று இலங்கையின் நன்மதிப்பு வாய்ந்த நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகின்றோம். புதிய தசாப்தத்தை புதிய உத்வேகத்துடன் ஆரம்பித்துள்ள நாம் நம்பிக்கை வாய்ந்த எமது பிரபல அணியில் இணைந்துகொள்ளும்படி உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

தொழில்:
நாம் தேடும் இளைஞர் யுவதிகள் துடிப்புமிக்கவர்களாகவும் சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைவதற்கு சந்தைப்படுத்தல் பிரிவுடன் இணைந்து செயற்படுபவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதி:
* க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தி (கணிதம், தமிழ் உட்பட)
* காப்புறுதி துறை அல்லது விற்பனைத்துறை சார்ந்த அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்
* வயது எல்லை 18 ற்கு மேல்
* அரச தனியார் துறைகளில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் (பகுதிநேர தொழில் வாய்ப்பு) ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நன்மைகள்
* எல்லையற்ற வருமானம்
* வெளிநாட்டு பயணங்கள்
* வாகன, வீட்டுக்கடன் வசதி
* மேலதிக கல்வி வசதிகள்
* வருடாந்த விருதுகள்.

குறிப்பு:- கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்,யுவதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நேர்முகத்தேர்வு: திகதி: 05-01-2011 புதன்கிழமை
நேரம்: 9.00 - 1.30
இடம்: இல: யூனியன் அஷ்யூரன்ஸ்,
357/1 பிரதான வீதி,
வேலாயுதம் மகா வித்தியாலயம் அருகாமை,
பருத்தித்துறை.

விற்பனை முகாமையாளர்,
யூனியன் அஷ்யூரன்ஸ், பி.எல்.சி
இல 357/1 பிரதான வீதி, பருத்தித்துறை

union assurance
Trust in your tomorrow, today.

(3346)

# கலிஸ், அம்லா பொறுப்பான ஆட்டம் தென்னாபிரிக்கா கௌரவமான நிலையில்

(கேப்டவுன்)

கலிஸ் - அம்லாவின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்காவிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட், ஒரே ஒரு இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இரு அணிகளும் தலா ஒரு டெஸ்டில் வெற்றி பெற தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையிலுள்ளது.

இந்நிலையில் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று கேப்டவுனில் ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் தோனி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட்டை இழந்து 21 ஓட்டங்களை எடுத்த போது மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.


இந்நிலையில் மழை இரு மணி நேரம் நீடித்துவிட ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதில் தென்னாபிரிக்க அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜக் கலிஸ் ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களையும் ஹசிம் அம்லா 59 ஓட்டங்களையும் பிறின்ஸ் ஆட்டமிழக்காமல் 28, ஏ.பி.டி வில்லியர்ஸ் 26, பீற்றர்சன் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சிறிசாந்த் 2 விக்கெட்டுக்களையும் சகிர் கான், இஷாந் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.



# அப்ரிடி மீது அக்ரம் சாடல்

நியூசிலாந்து தொடரில் சிறந்த அணித் தலைவராக அப்ரிடி செயற்படவில்லை எனப் பாகிஸ்தான் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் வாசிம் அக்ரம் குற்றம் சாட்டியுள்ளார்.

நியூசிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி 3 இருபது-20, 2 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. சமீபத்தில் நடந்த இருபது-20 தொடரை 1:2 எனப் பாகிஸ்தான் அணி கோட்டை விட்டது.

இதுகுறித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வாசிம் அக்ரம் கூறியதாவது,

நியூசிலாந்துக்கு எதிரான இருபது-20 தொடரை பாகிஸ்தான் அணி இழந்தது வருத்தம் அளிக்கிறது. இதற்கு பாகிஸ்தான் அணி வீரர்கள் ஒருங்கிணைந்து செயற்படாததே காரணம். சமீப காலமாகப் பாகிஸ்தான் அணி சிறந்த தலைவர் இல்லாமல் தவித்து வருகிறது.

இத்தொடரில் அப்ரிடி அணித் தலைவர் பொறுப்பில் சிறப்பாகச் செயற்படவில்லை. இதேபோல் வீரர்களும் தங்கள் பொறுப்புணர்ந்து விளையாடவில்லை. தொடர்ந்து இது போல் செயற்பட்டால் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை மோசமாக இழக்க நேரிடும். ஆசிப், அமீர் உள்ளிட்ட வேகப்பந்து வீச்சாளர்கள் இல்லாமல் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு படு மந்தமாகவுள்ளது.

உலகக் கிண்ணத் தொடர் நெருங்கும் வேளையில் பாகிஸ்தான் வீரர்களின் செயற்பாடு திருப்தியளிக்கவில்லை. உலகக் கிண்ணத் தொடருக்குப் புதிய தலைவரைத் தேர்வு செய்வது தவறான முடிவு. ஏனெனில் அணித் தலைவர் பொறுப்பை யாருக்கும் எளிதில் வழங்கி விட முடியாது. அதற்குச் சற்று கால அவகாசம் தேவைப்படும். இவ்வாறு அக்ரம் கூறினார்.

# மீண்டும் முன்னிலைக்கு வருவேன் மரியா ஷரபோவா சபதம்

(வெலிங்டன்)

சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் தான் மீண்டும் முன்னிலைக்கு வரமுடியும் என ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா கூறியுள்ளார்.

23 வயதான மரியா ஷரபோவா மகளிர் டென்னிஸ் தரப்படுத்தலில் உலகின் முதல் நிலை வீராங்கனையாக விளங்கியவர். 2004ஆம் ஆண்டு விம்பிள்டன் சுற்றுப் போட்டி, 2006 அமெரிக்கப் பகிரங்கச் சுற்றுப் போட்டி, 2008 அவுஸ்திரேலிய பகிரங்கச் சுற்றுப் போட்டி ஆகியவற்றில் சம்பியனாகியவர்.

ஆனால் அதன்பின் தோளில் ஏற்பட்ட காயம் காரணமாக நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்ட அவர் தற்போது சர்வதேச தரப்படுத்தலில் 18வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இன்று நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரில் ஆரம்பமாகும் ஏ.எஸ்.பி கிளாஸிக் சுற்றுப் போட்டியில் மரியா ஷரபோவா பங்குபற்றவுள்ளார். இது தொடர்பாக அவர் அங்கு செய்தியாளர்களைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை ஏ.எஸ்.பி கிளாஸிக் சுற்றுப் போட்டிக்கான டிக்கெட்டுக்கள் அனைத்தும் ஏறத்தாழ விற்றுத் தீர்ந்துவிட்டதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். மரியா ஷரபோவா இத்தொடரில் பங்குபற்றுவதும் இதற்கு முக்கிய காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்குமுன் 2002ஆம் ஆண்டு மற்றோர் ரஷ்ய வீராங்கனை அனா கோர்னிகோவா புகழின் உச்சியில் இருந்த நிலையில் இச்சுற்றுப் போட்டியில் விளையாடியபோது அதிக டிக்கெட்டுக்கள் விற்கப்பட்டிருந்தன.

# உலகக் கிண்ணத் தொடருக்கு பங்களாதேஷ் அணித் தலைவராக சகிப்

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான பங்களாதேஷ் அணியின் தலைவராகச் சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து (பெப்ரவரி18-ஏப்ரல் 2) உலகக் கோப்பை (50 ஓவர்) கிரிக்கெட் தொடரை நடத்துகின்றன. இதில் பங்கேற்கும் ஒவ்வொரு அணிகளும் 30 பேர் கொண்ட உத்தேச அணியைச் சமீபத்தில் அறிவித்தன.

இந்நிலையில் இம்மாத இறுதிக்குள் 15 பேர் கொண்ட அணி அறிவிக்கப்படவுள்ளது.

இத்தொடருக்கான அணித்தலைவர் மற்றும் துணைத் தலைவரை பங்காளதேஷ் கிரிக்கெட் சபை (பி.சி.பி) நேற்று முன்தினம் அறிவித்தது.

இதில் அணித்தலைவராக சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஏனெனில் சமீபத்தில் இவரது தலைமையில் பங்களாதேஷ் அணி, நியூசிலாந்து மற்றும் சிம்பாவே அணிகளுக்கு எதிரான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது.

தவிர, சுழற்சி முறையிலான அணித்தலைவராக மொர்டஷா வலது முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக உலகக் கிண்ண தொடரில் இடம்பெறுவது சந்தேகமாக உள்ளது. துணைத் தலைவராக ஆரம்ப வீரர் தமீம் இக்பால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து பி.சி.பியின் செய்தி தொடர்பாளர் ஜலால் யூனஸ் கூறுகையில்,

காயம் காரணமாக மொர்டஷா உலகக் கிண்ண தொடரில் பங்கேற்பது இன்னும் உறுதியாகவில்லை. இதனால் இத்தொடருக்கு சகிப் அல் ஹசன் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தவிர இவரது சமீபத்தியச் செயற்பாடு திருப்தி அளித்துள்ளது என்றார்.

# வலம்புரியில் வெளியான செய்திக்கு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் விளக்கம்

தங்களின் 01.01.2011 திகதிய வலம்புரிப் பத்திரிகையில் நாலாம் பக்கத்தில் "கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையோர் உடனடியாகக் கைது செய்ய வேண்டும் - மக்கள் கோரிக்கை" என்பதில் வர்த்தக சங்கங்களிடம் (எமது சங்கம் உட்பட) இரவு நேரக் காவலாளிகளை அமர்த்துமாறு பலமுறை கோரியுள்ள போதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற தகவல் தவறானதாகும். இதில் பருத்தித்துறைப் பகுதியும் சேர்க்கப்பட்ட நிலையில் எமது பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் நிலைப்பாட்டை தங்களுக்கும் மற்றைய வாசகர்களுக்கும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

பல இலட்சக் கணக்கான ரூபாய் களவு கொடுத்து மன உளைச்சலுக்கு உள்ளாகும் வர்த்தகர்கள் ஒரு சில ஆயிரங்களைச் செலவு செய்து பாதுகாப்புக்கு ஒரு ஊழியரை அமர்த்தாமல் அல்லது அமர்த்துவதற்கு ஒத்துழைக்காமல் வர்த்தகர் சங்கம் மட்டும் அவர்களின் வர்த்தக நிலையத்தைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்ப்பது செலவு செய்யாமல் இலாபம் மட்டுமே குறிக்கோளாக உள்ள ஒரு சில வர்த்தகரின் தகவலே.


எமது பருத்தித்துறை பகுதியிலும் வர்த்தக நிலையங்களில் சில திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ள போதிலும் இதுபற்றி எந்த வர்த்தகரும் எமக்கு அறியத் தரவில்லை.

இரவு நேரக் காவலாளியை அமர்த்துவது பற்றிக் கோரவும் இல்லை. எமது சங்கத்திற்குக் கடந்த காலங்களில் இரவு நேரப் பாதுகாப்புச் சேவை நடத்தப்பட்ட போதும் சங்க உறுப்பினராகிய வர்த்தகர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் பாதுகாப்புச் சேவையாளருக்கு ஊதியம் வழங்க முடியாத நிலையில் நிறுத்தப்பட்டது.

இருந்தும் தற்போது பருத்தித்துறை பொலிஸ் அதிகாரிகளால் இக்களவுகளை நிறுத்த எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றி 24.12.2010 இல் வர்த்தக சங்கத்தின் உதவியோடு வர்த்தகரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பொழுதும் 50 வீதத்திற்குக் குறைவானவர்களே சமுகமளித்த போதிலும், அதிலும்அனேகர் சரியான முடிவுகளை எடுக்க முடியாத தங்களின் வர்த்தக நிலையங்களின் ஊழியரையே அனுப்பி வைத்திருந்தனர்.

இருந்தும் இரவு நேரப் பாதுகாப்புச் சேவை ஆரம்பிப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டு 27.12.2010 இல் தங்களின் பத்திரிகையிலும் விளம்பரப்படுத்தி ஆட்சேர்ப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம். இவ் இரவு நேரப் பாதுகாப்புச் சேவையைச் சரிவர தொடர்ந்து நடைமுறைப்படுத்த ஒவ்வொரு வர்த்தகரின் ஒத்துழைப்பு அவசியமும் கூட. தனியாக வர்த்தகர் சங்கம் என்ற பெயரில் பொறுப்பைச் சுமத்தி விட்டுத் தங்களின் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் தங்கள் பங்களிப்பையும் வழங்கி ஒத்துழைத்தால் மட்டுமே இவ்வாறான களவுகளைத் தடுக்க முடியும் என்பதையும் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம், செயலாளர்
பருத்தித்துறை.



தாய்லாந்தில் நடந்த கண்காட்சி டென்னிஸ் போட்டியில் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை வீழ்த்தினார். பந்தைத் திருப்பியனுப்பிய கிளைஸ்டர்ஸ்.

# இலங்கைக்கான ...

இலங்கை மீதான அவநம்பிக்கை காரணமாக பிரித்தானியா ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இரத்துச் செய்தமையைப் போன்று அமெரிக்காவும் இரத்துச் செய்யும் நிலைமை காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-5)

## தமிழ்க்கட்சிகளின் அரங்...

தொடர்பில் பொது நிலைப்பாட்டை அடைவ தற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

எமது ஒருமித்த நிலைப்பாட்டை மக்க ளுக்கு காண்பிப்பதற்காக தேர்தலில் ஒன்று சேர்ந்து போட்டியிட வேண்டும். நாங்கள் பிரிந்து நின்றால் மக்களுக்கு எம் மீதுள்ள நம்பிக்கை இழக்கப்படும் என அவர் கூறினார்.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி திங்கட்கிழமை கலைக்கப்படவுள்ளதாக கடந்தவாரம் அரசாங்கம் அறிவித்தது. விதிகளின் படி மார்ச் மாதளவில் தேர்தல் இடம்பெறும். வேட்புமனு தாக்கலின் பின் னர் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார். (ந-5)

## அரசுடன்...

அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது. அவர்கள் உண் மையாக செயற்பட்டால் எமது முன்மொழிவு களை கையளிப்போம். நாம் பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைய வேண்டும். மற்றும் சமஷ்டி முறை யின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதி கார பரவலாக்கம் இடம்பெற வேண்டும் என கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி தேர்தல் விஞ்ஞா பனத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரி வித்ததையும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஞாப கப்படுத்தினார். (ந-5)

## இலங்கை...

நம்பப்படுகிறது. ஐ.நா. நிபுணர்குழுவின் பய ணத்திற்கான முன்னேற்பாடுகளை கவனிப்ப தற்காக அதன் பிரதம அதிகாரி றிச்சர்ட் பெனட் இன்னொரு அதிகாரியுடன் இந்தவாரம் இலங் கை வருவதற்கு திட்டமிட்டிருந்தார். ஆனால் அவர் தனது பயணத்தை தற்போது கைவிட்டுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக ஐ.நா. நிபுணர் குழுவின் இலங்கைக்கான பயணமும் கைவிடப்படலாம் என்று நம்பப்படுகிறது.

இது தொடர்பாக அதிகாரபூர்வ அறிவிப்பு அடுத்த வாரம் வெளியாகும் என்றும் எதிர்பார்க் கப்படுகின்றது. (ந-5)

## தீர்வுக்...

இந்நிலையில் மக்களைத் திரட்டி ஜனநா யகப் போராட்டத்தை முன்னெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகிவருவதா கவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் தார். (ந)

## ஆட்டோ...

பேசி அழைப்பொன்று வந்ததையடுத்து நேற்று முன்தினமிரவு 7.30 மணிக்கு கோபிநாத் வீட்டி லிருந்து ஆட்டோவைக் கொண்டு சென்றுள் ளார்.

எனினும் நேற்றுக்காலை வரை அவர் வீடு திரும்பாத நிலையிலே குடும்பத்தினர் பொலி ஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை உரும்பிராயில் கடந்த வியாழக்கிழமை காலை தனியார் கல்வி நிறு வன ஆசிரியர் ஒருவர் வெள்ளைவானில் வந்தோ ரால் கடத்தப்பட்டார் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


SUBRA
கல்வி நிறுவனம்


A/L 2013

ஜனவரி
05
புதன்
04.30



பாடங்களும், ஆசிரியர் குழாமும்

| பாடம் | சித்தன்கேணி | வட்டுக்கோட்டை |
|---|---|---|
| தமிழ் | யசிந்தன் | நாக.தமிழிந்திரன் |
| இந்துநாகரீகம் | சந்திரன் | சிறிஸ் |
| அளவையியல் | E.S பவன் | E.S பவன் |
| நாடகம் அரங்கியல் | கணேஷ் | வினோ |
| அரசியல் | அசோக் | அசோக் |
| வரலாறு | R.R ஆனந்தன் | ஜெயக்குமார் |
| விவசாயம் | சசிக்குமார் | சசிக்குமார் |
| புவியியல் | ஐங்கரன் | செல்வா |
| மனையியல் | மஜிபன் | மஜிபன் |
| கிறிஸ்தவம் | யூட் | யூட் |
| சமஸ்கிறிதம் | உமா | உமா |
| இலகு கணிதம் | ஐங்கரன் | தவசேகர் |
| பொருளியல் | ஜெயக்குமார், சிறி | சிறி |
| வணிகக்கல்வி | நந்தீஸ் | வரதன் |
| கணக்கீடு | சுபேசன், சீலன் | D.Sam |
| புள்ளிவிபரவியல் / கணிதகம் | தவசேகர் | தவசேகர் |
| இராசயணவியல் | Beno. சிவகுமார் | Beno. தாரணி |
| பௌதீகவியல் | அனபாயன், சண் | சண் . குகன் |
| இணைந்த கணிதம் | சிவகரன், ரூபன் | விஜிந்திரன் |
| உயிரியல் | கொங்கதாரன் | தயாபரன் |

A/L Day Classes ஆரம்பமாகிவிட்டது
தரம் 1 முதல் O/L ஆரம்பம் 05.01.2011
தரம் 5 புலமைப்பரிசில் ஆரம்பம் 05.01.2011
ஆங்கில மொழி மூல விசேட பிரிவு. ஆரம்பம் 05.01.2011

A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி – 08
காலை – 08.00
DMI

புதிய
நாவலர்
கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
கல்வியாண்டு 2011
தரம் 1 முதல் O/L வரை
பிரிவு 2 ஆரம்பம் :
05-01-2011
புதன் 3.30 மணி

புதிய பாடத்திட்டத்திற்கமைய....
பொருளியல்- நான்காவது புதிய வெளியீடு
A/L 2013 2012 2011
உயர்தரப் பொருளியல்
1500 பல்தேர்வு வினாக்கள் ,கட்டுரை ,கட்டமைப்பு வினாக்கள்
JANUARY 08 — DMI ஊடாக பெறலாம்
விலை 1000/=
By : S. S. சிறி B.Com
(இ-2030)

NEW SCIENCE HALL
KANNATHIDDY JAFFNA
2013 A/L கணித, உயிரியல் பிரிவு

PHYSICS
MR. S.SOTHILINGAM
MR. R.KUMARAN
MR. R.KUGAN



CHEMISTRY
MR. N.MAHESWARAN
MR. K.SIVATHIRAN




BIOLOGY
MR. T.THAMBI RAJAH
MR. T.GENGATHARAN
MR. M.ALPHONS
வழமையான ஆசிரியர்



COM.MATHS
MR. S.SENTHIL RAJ
MR. P.SENTHIL NATHAN



(இ-2036)

ஆரம்பம் :05.01.2011, TIME: 8.30 AM


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.